வெளியீடு எண் 345

உ

குருபாதம்

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியருளிய

(சைவ சமயாசாரியர்களாகிய)

நால்வர் நான்மணி மாலை

பொருள் விளக்கம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுளப்பாங்கின்வண்ணம்

வெளியிடப்பெற்றது

தருமபுர ஆதீனம்

1955

வெளியிட்டவர் :

வித்துவான்,

ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்.

ஞானசம்பந்தம் அச்சகம்.

தருமபுரம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்துநான்காவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா மலர்

29—5—1955

உ

குருபாதம்

முன்னுரை

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தான்எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே?

இது சைவவுலகை ஆண்டருளிய சண்முகத் தெய்வ மணியின் நினைவாகிய மணி மாலை. செந்தமிழ்த்தாயின் நூற் செல்வங்களுள் சிறந்த இதன் பெருமையை அறியார் யாரே?

நம்மை ஆண்டருள்கின்ற குரு தேசிக மணி (கேதார) மலையில் ஏறி(ச் சிவாநந்த)க் கடலில் திளைத்து, அஞ்சும் அடக்கிய தொண்டரையும் ஆசாரியர் நால்வரையும் மறவா நலத்தின் உருவமே இப் புதிய வெளியீடு.

இவ்வுரையை எழுதிய திருவிடைமருதூர், துறைசை ஆதீன உயர்பள்ளித் தமிழாசிரியர், 'தேவாரமணி' வித்துவான், சைவத்திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள், தேவாரப் பண்ணிசையில் வல்லவர். அவைகளில் அவ்வச் சமயத்திற்குத் தக்க திருப்பாடல்களைப்பாடி இன்பூட்டுவதில் ஒப்புயர்வில்லாதவர். இவ்வுரை விளக்கம் எழுதும் உரிமையும் பொருத்தமும் இவர்கட்கு உண்டு. வித்துவான் பட்டம் பெறுமுன் (முப்பதாண்டிற்கு முன்) இந்நூலை, புலிசை ஞானியார் அடிகளாரிடம் பயின்றவர். யானும் இவரும் ஒருசேர இருந்து கேட்டனம். ஆண்டு பல சென்றதால் கனுக்கண்டவாறு இருக்கின்றது. அதை நனவாக்குகின்றது இவ்வுரை வெளியீடு. இதன் பயனை இவ் விளக்கவுரையால் தமிழகம் எய்துக.

வாழ்க தமிழ். வளர்க திருநெறி.

ஆதீனப்புலவர்,

தருமபுர ஆதீனம், 29—5—'55. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

உ

குருபாதம்

நூலாசிரியர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி.

பொய்மையில் புரத்துச்சைவ மடாலயத்திலும் மயிலமலை யினும் வீற்றிருந்த திருவருளாளர் சிவஞானபாலய தேசிகர்க்கு ஞான புத்திரர் பலர். அவருள் மிகச் சிறந்தவர்கள் சிவப்பிரகாச சுவாமிகள். அவர்களை வடமொழிக் கடல் தென்மொழிப் பரவை என்றாலும் அவர்களது பெருமையை முற்றும் மொழிந்த தாகாது. அவர்கள் செந்தமிழ்த் தாய்க்குத் தேடி வைத்த நூற் செல்வங்களுள் இந் நால்வர் நான்மணி மாலையும் ஒன்றாகும்.

சைவ சமயாசாரியர் நால்வர் புகழும் அமைந்த இந்நாற்பது பாக்களையும், இன்றைக்கு இருபதுயாண்டின் முன் வரையில் கற்று இன்புறாத தமிழறிஞர் இருந்திலர். இப்பொழுதோ இதைக் கையாலெடுக்கும் நல்வினையாளர் சிலரேனும் அரியர். என்னே காலப்போக்கின் திரிபு!

தருமைக் குருமணி வழியில் இருபத்துநான்காவது மணி சண்முகத் தெய்வமணி. அதனை நினைந்து போற்றி வழிபட்டுய் யும் நாள் இத் திருநாள். இந்நாளில், நால்வர் நான்மணி மாலை விளக்கம் உலகோர் உய்ய வெளிவருகின்றது. யாவரும் இதைப் பாராட்டி ஏற்று, கற்று, சிவ பத்தியும், குரு பத்தியும், அடியார் பத்தியும் கொண்டு, பிறவிப் பயனை எய்தக் கடவர்.

இந் நன்மை நமக்கு எவ்வாறு கிடைத்தது? எங்கள் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகள் அவர்கள், அண்மையில் வடகோடியில்உள்ள

மலைகாணச் சென்றார்கள். அங்கு ஒரு பெருங்கடலைக்கண்டார் கள். அதில் மூழ்கித் திளைத்தார்கள். இவற்றையெல்லாம் நானா கண்டேன்? எனக்கு ஏது அப்பாக்கியம்? கண்டவர் சொல்லக் கேட்டேன். என்ன மலை அது ? திருக்கேதார மலை. அம்மலை யில் கடல் ஏது ? அங்கே அன்றி வேறு எங்கும் இராது அந்தக் கடல். அதுதான் ஆனந்தக் கடல். அதிலும் சிவானந்தக் கடல். அதைக் காட்டுவது வேதம். தமிழர்க்குத் திருமுறையே வேதம். ''திருமுறை'' என்றாலே நம் முன் வந்து காட்சி தருவார் எவர்? அவர்தாம் உண்ட ஞானப்பாலைத் தமிழ்ப் பாவாய் அருளிய பிள்ளையார். திருஞானசம்பந்தர் திருவடியை மறவாது போற்றி, அஞ்சுகளிறும் அடக்கிய அடியார் பெருமைகளை எண்ணி எண்ணி இன்புற்றார்கள். அவ்வின்பமே அன்பாயிற்று. இந் நான்மணி மாலையை நினைப்பித்தது. தருமை ஆதீனத்து முனிவரர் வெள்ளியம்பலவாணர்க்கு மாணாக்கர் பாடிய மாலை நினைப்பில் வாராதோ?

நினைத்தருளிய அவ்வேளையில், அவர்கள் திருவடி மலர்களை வணங்க விரும்பி அடியேன் வந்தேன். இந்நூலுக்குத் தெளி பொருள் விளக்கம் எழுதித் தருக எனப் பணித்தருளினார்கள். என் சிற்றறிவில் தோன்றியவற்றை எழுதினேன். திருவரு ளுக்குக் கைம்மாறும் உளதோ ? இந்நூல் பழைய செல்வம். இவ்விளக்கம் புதிய பேறு. வாழ்க சண்முகத் தெய்வமணி. வளர்க குரு லிங்க ஜங்கம பத்தி.

வித்துவான், திரு. மு. நடராஜ தேசிகர்
துறைசை ஆதீனம் உயர்பள்ளித் தமிழாசிரியர்,
திருவிடைமருதூர்.

உ
குருபாதம்

கடனிறவண்ணன் என்னும் ஆசிரியக் குறிப்பு

கடனிறவண் ணக்கவியில் கஞுலியமெய்த் தொண்டர்
கணம்புல்லர் இயற்பகையார் கஞ்சாறர் இளையான்
குடிமாறர் அமர்நீதி கோதில் அதிபத்தர்
கூறரிவாட் டாயர் திருக் குறிப்பறிநற் றெண்டர்
*அடல் கொள்கலிக் கம்பர்மைந்த ராயசண்டி கேசர்
அரிய சிறுத்தொண்டர் சுற்றமதுகளைகோட் புலியார்
திடமுடைய செருத்துணையார் திருநீலகண்டர்
செப்பும் இவர்ஆம் என்னத் தேர்ந்தறிக முறையே.

* அடல்கோள் கழற்சிங்கர் எனவும் பாடங்கொள்க. சுவாமிநாத பண்டிதர்.



தருமபுர ஆதினம் 24-ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ
சைவசமயாசாரியர்கள் திருவடிகளே துணை
குருபாதம்

சைவ சமயாசாரியர்களாகிய

நால்வர் நான்மணி மாலை

காப்பு

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

(பதவுரை) கை - துதிக்கையையுடைய, போதகத்தின் - யானை முகத்தைப் பொருந்திய விநாயகக் கடவுளின், கழல் - திருவடிகளை, எப்போதும் - எந்தக்காலத்திலும், அகத்து - மனத்தில் நினைவார்க்கு - நினைப்பவருக்கு, இடர் - (பிறவித்) துன்பம், இல்லை - இல்லையாம்.

(விசேடவுரை) எடுத்துக்கொண்ட நூல் இனிது முடியும் பொருட்டு முதலில் விநாயக வணக்கம் கூறுகிறுர். வணக்கம் மூவகைப்படும். வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் என்னும் அவற்றுள் இது வருபொருளுரைத்தலின்பாற்படும். பிறவித் துன்பங்களாவன. தன்னைப் பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவன என மூவகைப்படும்.

இடர் இலை :— அடியார்களது இடரைத் திர்த்தற்கு வந்தது விநாயகர் அவதாரம் என்பது கருத்து. அதனை "தனதடி வழிபடும் அவரிடர் கடிகணபதி வர அருளினன்" எனும் தமிழ் மறையால் அறிக.

அகத்து நினைவார்: நினைவார் என்பதே போதுமாக அகத்து என வேண்டா கூறியதன் குறிப்பு:-கண் முதலிய புறக் கருவிகள் பிற தொழில் கள்மேற் செல்லுமேனும் மனமாகிய அகக் கருவி இடைவிடாது இறைவனைச் சிந்தித்தல் எளிய காரியமும் பெரிய பயன் தருவதாயும் இருத் தலாம் இதனை "கள்ளக் காதலனிடத்து அன்பு கலந்து வைத்தொழுகும்,

உள்ளக் காரிகை மடந்தை போலும் பரைக்காப்பான், பள்ளக்காரி உண்டவனிடத்து உள்ளன்பு பதிந்து, கொள்ளக் காவலனிடைப் புறந்தொழிலும் உட்கொண்டார் " என்னும் திருவிளையாடலால் அறிக.

(கருத்துரை) விநாயகக் கடவுளை வணங்குபவருக்குப் பிறவித் துன்பம் இல்லை.

வெண்பா

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு. 1

(ப - ரை) பூவால் மலி மணி நீர்ப் பொய்கைக் கரையின்-தாமரைப் பூக்களால் நிறைந்த அழகிய நீரையுடைய பிரம தீர்த்தக்கரையிலே, மொழி ஞானப் பாலுண்டு - எவர்களாலும் வியந்து பாராட்டப்பெற்ற ஞானப்பாலை அருந்தி, நாவால் மறித்து - நாவினால் தடுத்து, இயற்பாவால்- இலக்கணம் அமைந்த தேவாரப் பாக்களால், எம் செவி அமுதாய் வார்த்த - எம்முடைய செவிக்கு அமுதமாக ஊட்டி அருளிய, பிரான் - தலைவராகிய ஞானசம்பந்த சுவாமிகளது, தண்டை - தண்டையையணிந்த, வெறி - வாசனை பொருந்திய, தண் - குளிர்ச்சியாகிய, கமலமே - தாமரை மலர் போன்ற திருவடிகளே, வீடு - எமக்குப் புகலிடம்.

(வி - ரை) இப்பிரபந்தம் அந்தாதித் தொடராகலின், ஆதியில் மங்கலமாகத் தொடங்கிய பூவெனப்படுவது அந்தத்திலும் பொறிவாழ் பூவேஎன முடிகின்றது. ஞானமாவது பதி,பசு, பாசங்களை உள்ளவாறுஉணரும் உண்மை உணர்வு. அது, பரம் அபரம் என இருதிறப்படும். பரமாவது திருவருள். அனுபவ உணர்வு. அபரமாவது சிவாகமங்களின் ஆராய்ச்சியுணர்வு. இதனை "உவமையிலாக் கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ் ஞானம் தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில் " என்னும் சேக்கிழார் வாக்கால் அறிக ஞானப்பால் உண்டு மறித்து எம் செவி அமுதாய் வார்த்த பிரான் - பாலை உண்டு செரிக்கும் ஏனையோர் போலாது எமது ஆளுடைய பிள்ளையார் தாம் உண்ட ஞானப்பாலை நாவால் தடுத்து எமது செவிக்கு அமுதமாக வார்த்தருளிய கருணைத் திறம் பாராட்டற்குரியது என்பதாம்.

(க - ரை) திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுடைய திருவடிகளே நமக்கு அடைக்கலமாகும்.

கலித்துறை

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்த
வாட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி [பொது
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே. 2

(ப - ரை) விட்டிற்கு வாயில் எனுந் தொடை சாத்து சொல் வேந்த - மோக்ஷவிட்டிற்கு வாயில் எனக் கூறப்பெறும் தேவாரப் பாமாலையைச் சாத்தி அருளிய திருநாவுக்கரசு சுவாமிகளே! பொது ஆட்டிற்கு வல்லன் - சபையில் நின்று ஆடுதலில் வல்லவராகிய சிவபெருமான், ஒருவற்கு ஞானவமுது உதவி-(திருஞானசம்பந்த சுவாமிகளாகிய)ஒருவற்கு ஞானப்பாலைக் கொடுத்து, நினக்கு நாட்டிற்கிலாத குடர் நோய் முன் நல்கினும் - மற்றொருவராகிய உமக்கு உலகத்தில் இல்லாத சூலை நோயை முன்னேகொடுத்தாலும், என் - என்ன குறைவு ? பாட்டிற்கு - தேவாரப் பாடல்கள் பாடுவதில், நீயும் - தேவரீரும், அவனும் - திருஞான சம்பந்தரும், எப்படியினும் - எவ்விதத்திலும், ஒப்பீர் - சமானமாவீர்கள்.

(வி - ரை) தொடை என்பது பூமாலைக்கும் பாமாலைக்கும் பொது. இங்கே பாடல் மாலையாகும் விதம் எவ்வாறெனில் - "துதிபெறு நால் வகைச் சொன் மலர்ப் பத்தியிற், பதிய எண் சுவைத்தேன் பரவ, அணி வாய்ப்பத், திக்கு முழுமையுஞ் சிவமணங் கமழ்தரத், தொக்கவன் பெனு நாரிற்றொடுக்கப்படுவது" ஆகலின் தொடைஎனப்பட்டது. தொடை என்பதற்கு இயையச் சாத்துதல் என்று கூறினார். பின் மூன்று அடிகளிலும் நான்கனுருபு ஏழன் பொருளில் வந்தது. எல்லார்க்கும் பொதுவில் இருப் பவன் ஒருவருக்கு நன்மையையும், மற்றொருவராகிய உமக்குத் திமை யையும் கொடுத்தது தகாதென்பார். "பொது வாட்டிற்கு வல்லன்" என்றார். ஒன்று அறக்கருணையும் மற்றொன்று மறக்கருணையுமாகி இரண்டும் கருணையேயாக முடிதலால் முற்றறிவினனாகிய அவன் செய்தது பாரபக்ஷமானதன்று என்பார்" பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர் என்றார். என் பாட்டிற்கு ஒப்பீர் என்றுங் கொள்ளலாம்.

(க - ரை) ஆட்கொண்ட முறையால் சம்பந்தரும் அப்பரும் வேறு படினும், அருள்பெற்ற முறையால் வேறுபட்டிலர் என்பது கருத்து.

விருத்தம்

படியிலா நின்பாட்டி லாரூர
நனிவிருப்பன் பரம னென்ப
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச
னிணைத்தடுத்தாட் கொண்டு மன்றித்

தொடியுலா மென்கைமட மாதர்பா
　　னினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
　　முழன்றமையால் விளங்கு மாறே. 3

(ப - ரை) ஆரூர - சுந்தரமூர்த்தி சுவாமிகளே! வான்தொழும் ஈசன் நினைத்தடுத்து, ஆட்கொண்டும் - தேவர்களும் வணங்கும் சிவபெருமான் தேவரீரைத் திருமணம் செய்யாதபடி தடுத்து அடிமைகொண்டும், அன்றி - அல்லாமலும், தொடியுலாம் மென்கைமட மாதர்பால் நினக்காகத் தூது சென்றும் - வளையல்களையணிந்த மென்மையான கைகளையுடைய பரவையார், சங்கிலியார் ஆகிய இளம் பெண்களினிடத்துத் தேவரீருக்காகத் தூது நடந்தும், மிடியிலாமனைகள் தொறும் இரந்து இட்டும் - வறுமையில்லாத வீடுகள்தோறும் சென்று உணவை இரந்துவந்து தேவரீருக்குப் படைத்தும், உழன்றமையால் - திரிந்தமையால், படியிலா - நிகரற்ற, நின்பாட்டில் - தேவரீரது திருப்பாடல்களில், பரமன் - சிவபெருமான், நனி விருப்பன் என்பது - மிகவும் விருப்பமுடையவன் என்பதை, விளங்குமாறு அடியனேன் அறிந்தனன் - தெளிவாக அடியேன் அறிந்து கொண்டேன்.

(வி - ரை) வான் இடவாகு பெயர். மடமையாவது - பிறர் உணர்த்துவதை உட்கொள்வதன்றித் தாம் உணர்ந்ததை வெளியிடாமை. உம்மைகள் மூன்றும் எண்ணின் கண் நின்றன.

1. வேத முதலியனவும் ஒப்பாகாத தேவாரத் திருப்பாடல்கள் என்பார் " படியிலா நின்பாட்டு " என்றார்.

2. மாதர்பால் தூது செல்லல் பிச்சைச் சோறு ஏற்றல் ஆகிய தகாத செயலும் செய்தமை, பாட்டின் விருப்பினல் அன்றிப் பிறிதில்லை யென்பார் " நின் பாட்டில் நனி விருப்பன் " என்றார்.

3. வான் தொழும் ஈசன் என்றது முப்பத்து முக்கோடி தேவர்கள் தன்னை வணங்குபவர்களாக இருப்பவும் உம்மைத் தடுத்து ஆட்கொள்ள வந்தமை வியப்பு என்பதாம்.

4. சிறந்த இனிய உணவு தேடிப் பிச்சைகொண்டனர் என்பார் " மிடியிலா மனைகள் தொறும் சென்றிரந்து " என்றார்.

5 உழன்றமை: தடுத்தாட்கொள்ள வந்தமையும், இருமாதர்பாலும் பலதரம் தூது சென்றமையும், வீடு வீடாய்ச் சென்று பிச்சை பெற்றமையையும் குறித்தது.

(கு - ரை) சிவபெருமான் செய்யத்தகாத காரியங்களைச் சுந்தரமூர்த்திகளுக்காகச் செய்தது அவர் பாட்டின்மேல் வைத்த பெருவிருப்பேயாம்.

அகவல்

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனே
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. 4

(ப - ரை) விளங்கு இழை பகிர்ந்த மெய் - விளங்குகின்ற ஆபரணங்களை அணிந்த உமாதேவியார் செம்பாதியாகக்கொண்ட திருமேனியையும், முக்கண் உடை காரணன் - சோமசூரியாக்கினிகள் என்னும் மூன்று கண்களையுமுடைய முதற் கடவுளின், உரையெனும் ஆரண மொழியோ? - திருவாக்கெனச் சிறப்பித்து உரைக்கப்படும் வேத வாக்கியமோ? ஆதி சீர்பரவும் வாதவூர் அண்ணல் - அம்முதற் கடவுளின் புகழைத் துதிக்கும் திருவாதவூரில் அவதரித்த பெருமையிற் சிறந்தவராகிய மாணிக்கவாசக சுவாமிகளது, மலர் வாய்ப் பிறந்த வாசகத்தேனே? - தாமரை மலர்போன்ற திருவாயினின்றும் தோன்றிய திருவாசகமாகிய தேனே? யாதோ சிறந்தது என்குவிர் ஆயின் - இவ்விரண்டினுள் எது சிறந்தது என்று கேட்டீர்களாயின், வேதம் ஓதின்-வேதத்தைப் (பலமுறை அத்தியயனஞ் செய்யினும் (அது கேட்டு), விழி நீர் பெருக்கி - கண்களினின்றும் நீரைப் பொழிந்து, நெஞ்சம் நெக்குருகி - மனம் நெகிழ்ந்துருகி, நிற்பவர்க் காண்கிலேம் - நிற்பவர்களை யாம் கண்டோமில்லை. திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் - திருவாசகத்தை இவ்விடத்தில் ஒருமுறை ஓதினும், கருங்கல் மனமும் கரைந்து உக - கருங்கல் போன்ற வல் நெஞ்சமும் இளகியோட, கண்கள் தொடு மணற்கேணியின் சுரந்து நீர் பாய - கண்களானவை தோண்டப்பட்ட மணற் கேணியைப் போல நீர் சுரந்து பாயவும், மெய் மயிர் பொடிப்ப - சரீரத்திலுள்ள உரோமங்கள் சிலிர்க்கவும், விதிர் விதிப்பு எய்தி - நடு நடுக்கம் அடைந்து, அன்பர் ஆகுநர் அன்றி - அன்பர் ஆகுபவர் அல்லது, மன்பதை உலகில் - மக்கட் பிறப்பினையுடைய இவ்வுலகத்தில், மற்றையர் இலர் - அப்படி அன்பர் ஆகாதவர்கள் ஒருவருமில்லை.

(வி - ரை) இரண்டன் இயல்பையும் உணர்வார் ஒருவர் வினவிற்கு விடை கூறுவார் போன்று வேதத்திலும் இத்தமிழ் வேதமாகிய திருவாசகம் எவர்க்கும் பயன் படுகின்ற தன்மை விளக்கியவாறு. விளங்கிழை - அன் மொழித் தொகை, ஓகாரம் இரண்டும் வினா. யாதோ என்பதில் ஓகாரம் அசைநிலை. எவரால் எந்நகர் விளக்க முற்றதோ அவரை அந்நகர்த் தலைவரென்றல் ஆன்றோர் வழக்கமாகலின், வாதவூர் அண்ணல் என்றார். "கொச்சைக்கிறைவன் ஞானசம்பந்தன்" என்னும் தேவாரமும் காண்க. வேதம் ஆண்டவன் திருவாக்கும் திருவாசகம் அடியவர் திருவாக்குமாக இருப்பினும் அடியவர் வாக்கே மேற்படுவதாயிற்று என்பது காரணத் தோடு விளக்கப்பட்டது.

(க - ரை) எல்லார்க்கும் சிவ பக்தியை விளைத்தலால் வேதத்தினும் திருவாசகமே சிறந்தது.

வெண்பா

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின் — னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு. 5

(ப - ரை) சம்பந்தா - திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளே! இலை படர்ந்த - தாமரை இலைகள் படர்ந்த, பொய்கையிடத்து - பிரம தீர்த்தக் கரையில், அழுதல் கண்டு - (தேவரீர்) அழுதலைப் பார்த்து, முலைசுரந்த - திருத் தனங்களிலே பால் பூரிக்கப் பெற்ற, அன்னையோ? - மாதாவாகிய பெரிய நாயகி அம்மையாரோ?- முன் - முன்னே, நின் நிலை விளம்ப - தேவரிரது சரித்திரத்தை (ஓர் வைதிகப் பிராமணர் வந்து) சொல்ல, கொங்கை சுரந்த அருட் கோமகளோ? - (அதைக் கேட்டவுடன்) தனங் களிலே பால் சுரக்கப்பெற்ற திருவருட் பெருக்கைப் பெற்ற மங்கையர்க் கரசியாரோ? இங்கு உயர்ந்தாள் ஆர் - இவ்விடத்தில் இருவருள் உயர்ந் தவர் யாவர்? எனக்கு சொல் - எளியேனுக்குக் கூறி அருள்வீராக.

(வி - ரை) புதல்வர் இயல்பைக் கேட்டவிடத்து முலை சுரத்தல் தலை யன்பும், பார்த்த விடத்து முலை சுரத்தல் இடையன்பும், அழுதல் கண்டு பிறர்தூண்ட முலை சுரத்தல் கடையன்பும் ஆம். இங்கே மங்கையர்க் கரசியாருக்கு ஆளுடைய பிள்ளையாரின் நிலையைக் கேட்டவுடன் முலை சுரந்தது. அழுகின்ற இப் பிள்ளைக்குப் பாலடிசில் பொன் வள்ளத்தூட்டு என்று இறைவன் பெரிய நாயகியாருக்கு அருளப் பால் சுரந்தது. இவ் விருவருள் மங்கையர்க் கரசியார் அன்பைத் தலையாயதுஎன்பர்.

"உயர்ந்தாள் ஆர்" என்பது, தேவரீர் சம்பந்தராகி இவ்விருவரியல்பையும் உள்ளவாறறிந்திருப்பீராகலின் உண்மை உணர்த்துக என்பார். "சம்பந்தா எனக்குச் சொல்" என்றுங் கூறினர். ஓகாரங்கள் இரண்டும் வினா. ஆர் - யாரென்பதன் மரூஉ.

(க - ரை) ஆளுடைய பிள்ளையார் பால் மங்கையர்க் கரசியார், வைத்த அன்பே தலையாய அன்பாகும்.

கலித்துறை

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத
தென்கொல்வெள் ளேறுடையான்
றனக்கன்பு செய்திருத் தாண்டக
வேந்தவித் தாரணியி
னினக்கன்பு செய்கின்ற வப்பூதி
யைச்சிவ நேசமுறு
மினர்க்கன்பு செய்நம்பி யாரூர
னேத்து மியல்பறிந்தே. 6

(ப - ரை) வெள் ஏறு உடையான் தனக்கு - வெள்ளிய இடபத்தை வாகனமாக உடைய சிவபெருமானுக்கு, அன்பு செய் திருத்தாண்டக வேந்த - அன்பைச் செய்த தாண்டக வேந்தராகிய திருநாவுக்கரசு சுவாமிகளே! சிவநேசம் உறும் இனர்க்கு அன்புசெய் நம்பி ஆரூரன் - சிவநேசமிக்க அடியார் கூட்டத்திற்கு அன்பு செய்கின்ற சுந்தர மூர்த்தி சுவாமிகள், இத்தாரணியில் நினக்கு அன்பு செய்கின்ற அப்பூதியை - இந்தப் பூமியில் தேவரீருக்குத் திருத்தொண்டு புரிந்துவருகின்ற அப்பூதி அடிகளை, ஏத்தும் இயல்பறிந்தும் - (திருத்தொண்டத் தொகையில், ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்" என்று) துதிக்கும் தன்மையைத் தெரிந்தும் எனக்கு நின்பொருட்டு அன்பு எய்தாதது என் கொல் - எளியேனுக்குத் தேவரீரிடத்தில் அன்பு உதியாதது என்ன காரணம்?

(வி - ரை) தாண்டகமென்பது ஒரு பண்: பெருமானை இப் பாடலால் பெரிதும் துதித்தனராதலின், திருத்தாண்டக வேந்தரெனத் திருநாமம் பெற்றார். அப்பூதி அடிகள் செய்த அன்பாவது தனய ராதியர்க் கன்றித் தம் மனைப்பாலுள்ள அளவைகள், நிறைகோல், ஆனிரை, மேதி யாதிகட் கும் திருநாவுக்கரசெனத் திருநாமம்சாத்தி, அத் திருநாமத்தானே பற்பல சாலை கூவல், குளம், தரு, தண்ணீர்ப்பந்தர் முதலியன அறத்தின் பொருட்டாக்கி வழிபட்டமையாம். என் - வியப்பிடைச் சொல். கொல் - ஐயம். உறு:-

மிகுதிப்பொருட்டு. அறிந்தும் என்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஏகாரம் - ஈற்றசை. நான்காம் வேற்றுமையின் சொல்லுரு பாகிய பொருட்டு என்பது ஏழன் பொருளில் வந்ததால் வேற்றுமை மயக்கம். திருநாவுக்கரசு சுவாமிகளே! உமக்கு அன்பு செய்பவர் பெரிய புகழை அடைவர் என்பதை நன்கு அறிந்து வைத்தும் எனக்கு உம்மிடத்து அன்பு நிகழாமை பெரிய வியப்பு என்பதாம்.

(கு - ரை) திருநாவுக்கரசர்பால் அன்புடையவர்கள் மிகவும் போற்றற் குரியராவர்.

விருத்தம்

அறிந்து செல்வ முடையானா
        மளகைப் பதியாற் றோழமைகொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு
        மொருவன் வேண்டுமென விருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
        துணைவா நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த்
        திகழு நுதற்கட் பெருமானே. 7

(ப - ரை) துறந்த முனிவர்தொழும் பரவை துணைவா - அகப் பற்றையும் புறப் பற்றையும் விட்ட முனிவர்களும் வணங்குகின்ற பரவை நாச்சியாரின் நாயகனே! சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதல்கண் பெருமானே - மேம்பட்ட ஞானமே திருமேனியாக விளங்கும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானே, செல்வம் உடையான் ஆம் அளகைப் பதியான் தோழமை கொண்டு - பொருட் செல்வத்திற்குத் தலைவனாய் அளகாபுரிக்கு இறைவனாகிய குபேரனைத் தோழமை கொண்டு, உறழ்ந்த கல்வி உடையானும் ஒருவன் வேண்டுமென இருந்து - அச் செல்வத்திற் கொத்த கல்விச் செல்வத்தில் தலைமைபெற்ற தோழனும் ஒருவன் வேண்டுமென நெடுநாளாகக் காத்திருந்து, நினை அறிந்து தோழமை கொண்டான் - தேவரீரைத் தெரிந்து தோழமை கொண்டருளினார்.

(வி - ரை) ஒருவருக்குச் செல்வமிக்க தோழர் ஒருவர் உடைமையும், கல்விமிக்க தோழர் ஒருவர் உடைமையும் இன்றியமையாதது. ஆகையால் செல்வத்திற் சிறந்த குபேரனைத் தோழனாகப் பெற்ற சிவ பெருமான் கல்வியிற் சிறந்த தோழர் ஒருவர் கிடைக்கவேண்டுமென்று நெடுங்காலங் காத்திருந்து அறிவிற் பெருமை உடையவராகிய உம்மைத் தோழமை கொண்டாரென்றால், உமது பெருமை எம்மால் அளவிடும் தரத்ததோ?

தோழமை:- மை பண்புப்பெயர் விகுதி. முற்றத்துறந்த முனிவர் மனைவியோடு கூடிய ஒருவரைவணங்குவார் என்பது பொருந்தாதது. உம்மிடத்து அது பொருந்தியது வியப்பு என்பார் "துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா" என்றார். துறந்த முனிவர் என்பது பெருமிழலைக் குறும்ப நாயனார் முதலியோரை.

(க - ரை) சிவபெருமானுக்குத் தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனார் பெருமை அளவிடற்கு அரியது.

அகவல்

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல்வேய்த் தோளிடத் தவனே. 8

(ப - ரை) பெருந்துறை புகுந்து - திருப்பெருந்துறையை யடைந்து, பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன் - பேரின்பப் பெருக்கில் திளைத்த தூய்மையாராகிய மாணிக்கவாசக சுவாமிகள், மொழிந்த வாசகமே வாசகம் - அருளிய திருவாசகமே வாசகம், அதற்கு வாச்சியம்-அவ் வாசகத்திற்கு வாச்சியம், தூசு அகல் அல்குல் - ஆடையணிந்த அகன்ற நிதம்பத்தையும், வேய்த்தோள் இடத்தவனே - மூங்கில் போன்ற தோள்களையும் உடைய உமாதேவியாரை இடப்பாகத்தில் உடைய சிவபெருமானே!

(வி - ரை) உலகம் சொல்லும் பொருளுமென இரண்டாய் அடங்கும். சொல்வாசகமெனவும் அதன் பொருள் வாச்சியமெனவும் கூறப்படும். இங்கு வாசக மென்பது திருவாசகம். அதன் வாச்சியமாக இருப்பவர் சிவபெருமான். தூசு அகல் அல்குல் வேய்த்தோள் - அன்மொழித் தொகை, பன் மொழித் தொடர். வாசகம் வாச்சியம் இரண்டும் வட சொற்கள்.

(க - ரை) திருவாசகத்துக்குப் பொருள் சிவ பெருமானே!

வெண்பா

இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி—நெடுகாட்டுஞ்
சம்பந்தா வென்புகின்பால் தந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு. 9

(ப - ரை) சுடுகாட்டுள் ஆடுவான் - சுடுகாட்டில் ஆடுகின்றவ ராகிய சிவபெருமானை, சுட்டிநெடு காட்டும் சம்பந்தா - சுட்டுதலொடு காட்டியருளிய ஞானசம்பந்தமூர்த்தியே! இடுகாட்டுள் மாதர் எலும்பில் புரண்மால் - சுடுகாட்டிலே பிருந்தையின் எலும்பிலே புரண்ட திருமால், என்பு நின்பால்தந்து - அவ்வெலும்பைத் தேவரீரிடம் கொடுத்து, கும்பம் தாம் என்னும் முலைகொம்பு - அமிர்த கலசங்களே என்னும் தனங்களை யுடைய பூங்கொம்புபோலும் ஒரு அழகிய பெண்ணாக, ஆக்கிக் கொண் டிலன் - செய்வித்துக் கொண்டானில்லை. என்? - அவன் அறியாமை இருந்தவாறு என்னே!

(வி - ரை) எலும்பைப் பெண்ணாக்கும் ஆற்றலையுடைய தேவரீ ரிடத்தே வந்து உயிர்ப்பித்துக்கொள்ளத் தெரியாமல் பெண்ணாசையால் அவள் எலும்பிலே புரண்டான் என்று திருமாலின் அறியாமைக்கு இரங்கியவாறு.

சிவபெருமானைச் சுடுகாட்டுள் ஆடுவான் என்று கூறிய குறிப்பு "காடுடைய சுடலைப்பொடி பூசி" என்னும் பாடற் குறிப்பு. 'பெம்மான் இவன் அன்றே" என்று சுட்டிக் காட்டியதையே, "சுட்டிநெடு காட்டும் சம்பந்தா!" என்று குறித்தார்.

(க - ரை) சம்பந்தப்பெருமான் திருப்பதிகங்கள் ஐந்தொழிலும் இயற்று வன என்பதில் படைத்தல் தொழிலை இங்கு அறிக.

கலித்துறை

கொள்ளைக் கதிர்முத்தின் பந்தரும் சின்னமும் கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகும் நாவர சாய பெருந்தகையோய்
கள்ளைக் குவளை யுமிழ்விழி யிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே

(ப - ரை) நாவரசாய பெருந்தகையோய் - திருநாவுக்கரசரென்னும் பெருந்தகைமை வாய்ந்தவரே! குவளைகள்ளை உமிழ் விழியில் - தேனை நீலோற்பல மலர்கள் சொரிகின்ற திருவிழிமிழலையிலே, வள்ளைக்குழை உமை பங்காளர் கையில் - வள்ளை இலைபோலும் காதுகளை உடைய அம்பிகை பாகராகிய சிவபெருமானது திருக்கரத்தில், நீ படிக்காசு ஒன்று என் வாங்கினை - தேவரீர் ஒரு படிக்காசை ஏன் வாங்கினீர்? அது அப்படி வாங்குதல், கொள்ளைக் கதிர் முத்தின் பந்தரும் - (திருப்பட்டீச் சரத்திலே) மிகுந்த கிரணங்களையுடைய முத்துப் பந்தரையும், சின்னமும்

(திருவரத்துறையிலே) முத்துச்சின்னத்தையும், கொள்ளும் ஒரு பிள்ளைக்குத் தகும் - பெற்ற ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு அது தகும். உமக்குத் தகுமா?

(வி - ரை) அரசராய் இருப்பவர்க்கே முத்துப்பல்லக்கு, முத்துச் சின்னம் தகும், பிள்ளையாய் இருப்பவர்க்கு ஒரு காசு கொடுப்பினும் போதும் இதற்கு மாருகப் பிள்ளைக்குப் ப்ல்லக்கும், சின்னமும் கொடுத் தமைகண்டும் அரசராகிய நீர் காசு பெற்றது தகாது என்பது பாடலின் நயம். இலட்சப் பிரபு, அல்லது கோடீச்சுரர் ஒருவர் கையில் ஒரு காசு யாசகம் பெற்ருர் என்ருல் பெறுபவர்க்கு மிக்க குறைவே. அன்றிக் கொடுப்பவர்க்கும் பழியாம். அதுபோல உலகம் முழுதும் உடைய இறைவர் கையில் ஒரு காசா பெறுவது என்பார் உமை பங்காளர் கையில் என்வாங்கினை என்ருர். தகுமா என்பதின் வினைஇடைச்சொல் தொக்குத் தகும் என நின்றது. காசுவாங்குதல் பிள்ளைக்குத்தகும். பெருந்தகைக்குத் தகுமோ?

(சு - ரை) சிவபெருமான் கையில் நாவுக்கரசர் காசு வாங்கினது தகாது.

விருத்தம்

வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற் கூற்றுவனு
லோங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையி
லுமிழ்வித்துச் சிவமெனுமோர்தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே. 11

(ப - ரை) கோங்க முகை கவற்றும் - கோங்கின் அரும்பைக் கவலை அடையச்செய்யும். இளமுலைப் பரவை மகிழ - இளமைவாய்ந்த கொங்கைகளையுடைய பரவை நாச்சியார் மகிழும்படி, முன் குண்டையூர் நெல்மலை கொண்ட - முன்பு குண்டையூரிற் செறிந்த நெல் மலையைப் பூத கணங்களால் திருவாரூரிற் பெற்றுக்கொண்ட, அருட் கடலே - கிருபா சமுத்திரமே! வாங்கு சிலை புரையும் - வான வில்லை நிகர்க்கும். உடல் எனும் குளத்தில் - தேகமெனப்படும் குளத்திலே, மூல மலம் எனும் - ஆணவ மலம் எனப்படும், ஓர் வெம் கரவின் - ஒரு வெவ்விய முதலையின், பகுவாயின் நின்றும் - விரிந்த வாயின் நின்றும், தீங்கு இல் - அழிவில்லாத,

உயிர் எனும் பனவக்குல மகனை - உயிரெனப்படும் அந்தணர்குலப்புதல் வனை, ஆதி திரோதாயி என்னும் - திரோதாயி எனப்படும் ஆதி சக்தியாகிய ஒரு வெந்திறல் கூற்றுவனால் - ஒப்பற்ற வெவ்விய வலிய இயமனால், ஓங்குறும் நாதாந்தம் எனப் பெயரிய - உயர்ந்த நாதாந்தம் எனப் பெயர்பெற்ற, அக்கரையில் உமிழ்வித்து - அக்கரையிலே கக்கு வித்து, சிவம் எனும் - சிவம் எனப்படும், ஓர் தந்தையொடும் கூட்டாய் - ஒரு பிதாவோடும் சேர்ப்பீராக!

(வி - ரை) சைவ புராணங்கள், வரலாறுகளைமட்டுமன்றிச் சித்தாந்த சாத்திரக் கருத்துக்களையும் அடக்கியுள்ளன என்பதை, திருமூலர் திரு மந்திரத்தில் "முப்புரமாவது மும்மலகாரியம்" என்றதால் அறியலாம். முதலை வாய்ப் பிள்ளை அழைத்த வரலாறும் சாத்திரக் கருத்தை அடக்கி யுள்ளது என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது. ஆன்மா, பார்ப்பனச் சிறுவனாக உருவகஞ் செய்யப்பட்டிருக்கிறது.

குளத்தில்		உடம்பில்
பார்ப்பனச்சிறுவன்	... ...	உயிர்
முதலை	... ...	ஆணவமலம்
இயமன்	... ...	திரோதாயி மலம்
கரை	... .	நாத தத்துவத்திற்கு அப்பாற் பட்டது.
தந்தை	... ...	சிவபெருமான்

இவ்வாறு உருவகங் காண்க.

தோன்றி நின்றழியும் உடம்பு - வானவில்லிற்கு உவமை.

(க - ரை) வன்றொண்டப் பெருந்தகையிர்! முதலைவாய் மகனை மீட்டு, அவனது தந்தையோடு சேர்ப்பித்தது போல, ஆணவ மலப்பிணி யுட்பட்ட எனது உயிரையும் விடுவித்து எனது தந்தையாகிய சிவத்தோடும் கூட்டுவிராக.

அகவல்

கடனிற வண்ணன் கண்ணெனன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து

மருமக ணறும்பூங் கருமயி ருதவியும்
னென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மால் தடக்கையிற் சங்கம் நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமகள் தழுவ மனமகிழ் வோனே. 12

(ப - ரை) செங்கண்மால் தடம் கையில் - சிவந்த கண்களை உடைய திருமாலின் விசாலமான கரத்திலுள்ள, சங்கம் நாண - பாஞ்ச சன்னியம் நாணும்படி, முள் தாள் தாமரை - முட்கள் செறிந்த தண்டையுடைய செந்தாமரைகளின், முறுக்கு அவிழ் மலர்மேல் - கட்டவிழ்ந்த மலர்களின் மீது, வலம்புரி கிடக்கும் - வலம்புரிச் சங்கங்கள் வதியும், வாதவூர் அன்ப - திருவாதவூரில் அவதரித்த அன்பரே, கருங்கடல் வண்ணன் - கரிய கடல் போன்ற நிறத்தையுடைய திருமால், கண் ஒன்று இடந்து - தன் கண்களில் ஒன்றைப் பெயர்த்து, மறை சிலம்பு அரற்றும் - வேதமாகிய சிலம்புகள் ஒலிக்கின்ற, மலர் அடிக்கு அணிய - தாமரை மலர் போன்ற திருவடிகளுக்குச் சாத்த, பருதி கொடுத்த சுருதி நாயகற்கு - அவர்க்குச் சக்கரப் படை அளித்த வேத முதல்வராகிய சிவபெருமானுக்கு, முடி விளக்கு எரித்தும் - திரு முடியைத் திருவிளக்காக எரியச்செய்தும், கடிமலர்க் கோதை - மணம் பொருந்திய மலர் மாலை அணிந்த, சுரிகுழல் கருங்கண் -

சுருண்ட கூந்தலேயும் கரிய கண்களேயும் உடைய, துணைவியை அளித்தும் - (இல்வாழ்க்கை)த் துணையாகும் மனைவியைக் கொடுத்தும், அருமகள் - அரிய புதல்வியின், நறு பூ கருமயிர் உதவியும் - வாசனைமிக்க அழகையுடைய கரிய அளகத்தை அளித்தும், நெல் முளை வாரி இன் னமுது அருத்தியும் - நீரில் மிதந்த நெற்களின் முளையை வாரிக்கொண்டு வந்து சமைத்து இனிய அமுதூட்டியும், கோவணம் நேர் - கோவணத்தின் நிறைக்குச் சமமாக, தனை நிறுத்துக் கொடுத்தும் - தன்னையும் நிறுத்துத் தந்தும், அகப்படும் மணி மீன் - கடலில் அகப்பட்ட அழகிய மீனை, அரற்கு என விடுத்தும் - சிவபெருமானுக்கெனக் கடலில் விடுத்தும், அரிவாள் பூட்டி ஊட்டி அரிந்தும் - அரிவாளைப் பூட்டி ஊட்டியை அறுத்தும், உடை ஒலிக்கும் சிலையிடை தலைமோதியும் - ஆடையைத் துவைக்கும் கற்பாறை யில் தலையைத் தாக்கியும், மொய் மலர்க் கோதை - செறிந்த மலர்க் கூந்தலையுடைய மனைவியின், கை மலர் துணித்தும் - செந்தாமரை மலரை யொத்த கையை வெட்டியும், தந்தையைத் தடிந்தும் - தம் பிதாவின் தாளைத் துணித்தும், மைந்தனைக் கொன்றும் - தம் புதல்வனைச் சமைத்தற்கு அரிந்தும், குற்றம் செய்த சுற்றம் களைந்தும் - சிவாபராதம் இயற்றிய சுற்றத்தவர்களில் ஒரு சிறுவனும் எஞ்சாவகைச் சிதைத்தும், பூக்கொளும் மாதின் மூக்கினை அரிந்தும் - சிவபிரான் திருமுற்றத்துச் சிந்திய மலரை எடுத்து மோந்த நங்கையின் நாசியைக் கொய்தும், இளமுலை மாதர் வளமை துறந்தும் - இளங் கொங்கைகளையுடைய பெண்களிடத்தில் நுகரும் இன்பத்தை ஒழித்தும், பண்டைநாள் - முற்காலத்தில், ஒரு சிலர் தொண்டராயினர் - ஒரு சிலர் அடியராயினர். (அங்ஙனமாக) இருக்கும் அடுக்கல் அரக்கன் எடுப்ப - தாம் எழுந்தருளியிருக்கும் கைலேயை இராவணன் தூக்கலும் (அது கண்டஞ்சி), வரை பொரு மொய்ம்பில் - மலேயை வெல்லும் வலிய புயங்களில், முலே பொர - தனங்கள் தாக்கும்படி, மலைமகள் தழுவ - மலைக்கு மகளாகிய அம்மையார் அணைக்க, மனம் மகிழ்வோனே ! - திருவுளம் உவப்பவராகிய சிவபெரு மானே, பாடும் பணிநீ கூடும் பொருட்டு - பாடற்றொண்டைத் தேவரீர் தம்மீது மேற்கொள்ளும் பொருட்டு, மதுரைமாநகரில் - மதுரைமா நகரத் திலே, குதிரை மாறியும் - நரியைப் பரியாக்கி விற்றும், விண் புகழ் முடி மிசை - தேவரும் துதிக்கும் திருமுடிமீது, மண் பொறை சுமந்தும் - மண் செறிந்த கூடையைத் தூக்கியும், நீறு எழில் மேனியில் - திருநீற்றின் அழகு விளங்குகின்ற திருமேனியில், மாற்றடிபட்டும் - பிரம்படி ஏற்றும், நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன் - தேவரீரை அடியாராகக் கொண்டனன்.

(கு - ரை) பிறர் செய்யமுடியாத காரியங்கள் செய்து ஏனையோர் எல்லாம் சிவபெருமானுக்கு அடியாராகத், திருவாதவூரர் பொருட்டுச் சிவபெருமான் செய்யத்தகாதகாரியங்களைத்தாம் செய்து, அவரை அடிமை யாக்கிக் கொண்டனர் என வாதவூரரின் பெருமை கூறப்பட்டது.

1. முடி விளக்கெரித்தவர் – கணம்புல்லர்
2. துணைவியை அளித்தவர் – இயற்பகையார்
3. அருமகள் கருமயிர் உதவியவர் – மானக்கஞ்சாறர்
4. நென்முளைவாரி இன்னமுது அருத்தியவர் – இளையான்குடிமாறனுர்
5. கோவணம் நேர்தனை நிறுத்துக் கொடுத்தவர் – அமர்நீதியார்
6. அகப்படுமணிமீன்அரற்கெனவிடுத்தவர் – அதிபத்தர்
7. ஊட்டி அரிந்தவர் – அரிவாட்டாயர்
8. சிலையிடைத் தலை மோதியவர் – திருக்குறிப்புத்தொண்டர்
9. கோதை கைமலர் துணித்தவர் – கலிக்கம்பர்
10. தந்தையைத் தடிந்தவர் – சண்டேசுவரர்
11. மைந்தனைக் கொன்றவர் – சிறுத்தொண்டர்
12. குற்றஞ்செய்த சுற்றம்களைந்தவர் – கோட்புலியார்
13. பூக்கொளுமாதர்மூக்கினை அரிந்தவர் – செருத்துணையார்
14. இளமுலைமாதர் வளமை துறந்தவர் – திருநீலகண்டர்

வெண்பா

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு. 13

(ப - ரை) நெகிழ்ச்சி மலர் சந்தையினும் வண்டு இரையும் - விரித லுடைய மலர்களில் பார்ப்பனச் சிறுவர் வேதம் பயிலும் ஓசையினும் வண்டுகள் மிக முழங்கும், தண்புகலிச் சம்பந்தா - குளிர்ச்சி பொருந்திய புகலியில் தோன்றி அருளிய சம்பந்தரே! எதிர்வந்து புகழ்ச்சியொடு நீ பாடும்போது - திருமுன் சார்ந்து புகழோடு கூடிய திருநெறிய தமிழைத் தேவரீர் பாடுங்கால்; தந்தையினும் பால் கொடுத்த தாய்க்கு - தந்தையா ரிலும் ஞானப்பாலை அளித்த அன்னையார்க்கு; மிக மகிழ்ச்சி உண்டு போலும் - உவகை மிக உண்டுபோலும்.

(வி - ரை) ஆளுடைய பிள்ளையார் எழுது மறையைப் பாடியது சிவபெருமான் தூண்டுதலாலும் அத்தூண்டுதலின்படி அம்பிகை ஞானப் பால் ஊட்டினமையாலும் ஆம். ஞானப்பால் உண்டதன் விளைவாகத் தெய்வத் திருநெறிய தமிழ் பாடியதைக் கேட்கும்பொழுது அவ்விருவரில் எவர்க்கு மகிழ்ச்சி அதிகமாக நிகழ்ந்திருக்கும்? சொன்னவர்க்கா? கொடுத் தவர்க்கா? இது இப்பாட்டில் தோன்றும் நயம்.

சந்தை:- சந்தஸ் என்னும் வடசொல்லின் திரிபு. பார்ப்பனச் சிறுவர் வேதம் பயிலும் ஓசை. "நால்வாய்ச் சந்தைகூட்டி நுவல்மறைச் சிருரை யொத்த" என்பது திருவிளையாடற் புராணம். போலி—ஒப்பில் போலி.

(க - ரை) அம்மையோடு அப்பர் திருமுன் திருஞானசம்பந்தர் தேவாரம் பாடுங்கால் அம்மையே மிக மகிழ்வர்.

கலித்துறை

தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி ளுரறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி ளுணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னேக்குதற்கே. 14

(ப - ரை) நோய்இலி ஆகிய சொல்இறை - பிறவித்துன்பம் இல்லாதவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள், தான் எனும் ஓர் கோயிலின் ஆர்-ஆன்மா எனப்படும் தனி ஆலயத்தின் கண் பொருந்திய. அறிவு ஆகிய நாமம் முன்கொண்டிருந்த வாயிலின்-ஆன்மஞானமாம் பெயரைக்கொண்டு அநாதியே உள்ள வாயிலிற் பந்தித்து நிற்கும், ஆணவம் ஆகும் கபாடமும் மன்திறந்து - ஆணவமலமென்னும் கதவையும் மிகத்திறந்து, தாய்இலி ஆகும் சிவபெருமான்தனை - பிறப்பு இல்லாதவராகிய சிவபெருமானை, நோக்குதற்குக் காட்டுவன் - அனைவரும் தரிசித்தற்குக் காட்டுவார்.

(வி - ரை) இதுவும் 11 ஆம் பாடல்போல் உருவகம். திருநாவுக்கரசு சுவாமிகள் திருமறைக்காட்டில் அடைத்திருந்த கதவு திறக்கும்படி பாடி, கோயிலுள் சிவபெருமானை அனைவரும் தரிசிக்கச்செய்த வரலாறு குறித்து அதன்மூலம் அறியக்கிடக்கும் சாத்திரக் கருத்தையும் குறித்தார் ஆசிரியர். ஆன்மஞானம் என்னும் வாயிலில் உள்ள ஆணவமாகிய கதவைத் திருநாவுக்கரசு சுவாமிகள் திறந்து தந்த சிவஞானம் வாயிலாகக் கடவுளைத் தரிசிக்க அருளுவர் என்பதாம்.

தாயிலியாகும் சிவபெருமான்—"தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி" என்ற திருவாசகக் கருத்து.

(க - ரை) திருநாவுக்கரசு சுவாமிகளை வழிபட்டால் ஆணவமலத் தடையின்றிச் சிவத்தை அறியலாம்.

விருத்தம்

நோக்குறு நுதலோ னின்னிடைவிருப்பா
　　னூற்பக வன்னநுண் மருங்குல்
வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி
　　மாற்றுவான் சென்றன னென்றாற்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
　　கொண்டதே துக்குநீ புகலாய்
காக்கரு மதலை விழுங்கிய முதலை
　　கான்றிடத் தோன்றுநா வலனே. 15

(ப - ரை) விழுங்கிய முதலை கான்றிடகாக்க அரும் மதலைதோன்றும் நாவலனே - விழுங்கிய முதலையே கரையில் கக்கும்படி உதிப்பித்தற்கரிய புதல்வன் உதித்தற்கு ஏதுவாகிய வாக்கின் வன்மையை உடைய புலவரே!, நுதல் நோக்கு உறுவோன் - நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான், நின்னிடை விருப்பால் - தேவரீரிடம் வைத்த ஆசையால், நூல்பகவு அன்ன நுண்மருங்குல் - நூலின் பிளப்பை ஒத்த நுண்ணிய இடையையும், வார்குவி முலைமெல் மகளிர்தம்:- கச்சணிந்த குவிந்த தனங்களையுடைய மெல்லிய பரவை நாச்சியாரின், புலவி மாற்றுவான் சென்றனன் என்றால்-ஊடலைத் தணிக்கச் சென்றனன் என்றால்,கோக்கலிக் காமன் - ஏயர்குடித் தலைவராகிய கலிக்காமநாயனார் ஒருவரும், (அது காரணமாக) வயிற்றிடைக் குத்திக்கொண்டது - தம் வயிற்றிலே குத்திக் கொண்டது, ஏதுக்கு நீ புகலாய் - எதன்பொருட்டு நீர் சொல்வீராக.

(வி - ரை) சிவபெருமான் பரவைநாச்சியார்க்காகத் தூது சென்றமை, சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வற்புறுத்தலின்மேல் நிகழ்ந்த செய்யத்தகாத காரியமென்று ஏயர்கோன் கலிக்காமர் நினைத்தமையால் போலும் தம் வயிற்றில் குத்திக்கொண்டனர். தூது சென்றதில் சிவபெருமானுக்கும் விருப்பம் என்பது அறிந்திலர்போலும்.

(கு -ரை) சிவபெருமான் பரவைநாச்சியார்க்காகத் தூதுசென்றது தகாதசெயல் அன்று. தக்க ஒரு செயலேயாகும்.

அகவல்

வலமமு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த

திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. 16

(ப - ரை) வலம் மழு உயரிய - வலப்பக்கத்திலே மழுவை உயர்த்திய, நலம் மலி கங்கை நதி தலை சேர்ந்த - புனிதம் நிரம்பிய கங்கா நதி தலையில் பொருந்திய, நல் கருணைக் கடல் முகந்து - நல்ல சிவமென்னும் கிருபைக் கடலில் முகந்து, உகந்த மாணிக்கவாசகன் எனும் ஒரு மாமணி - ஓங்கிய மாணிக்கவாசகர் எனப்படும் மேன்மை வாய்ந்த ஒரு மேகமானது, உலகு உவப்பபொழிந்த - மக்கள் ஆகிய உயிர்கள்மகிழச் சொரிந்த, திருவாசகம் எனும் பெருநீர் ஒழுகி - திருவாசகமெனும் பெரிய வெள்ளம் சென்று, ஓதுவார் மனம் எனும் - ஓதுபவர்களுடைய உள்ளம் என்னும், ஒண்குளம் புகுந்து - சிறந்த ஏரியின் உள்ளே நிரம்பி, நா எனும் மதகில் நடந்து - வாய் என்னும் மதகின் வழி வெளிப்பட்டு, கேட்போர் செவி எனும் மடையில் - சிரவணம் செய்பவர்களுடைய செவிகள் என்னும் மடைகளில், செவ்வி தின் செல்லா - வழுவுதல் இன்றிச் சென்று, உளம் எனும் நிலம்புக - அவர்களுடைய நெஞ்சம் என்னும் நிலத்திற் பாய. ஊன்றிய அன்பு ஆம் வித்தில் - அங்கே பதிக்கப்பெற்றுள்ள அன்பு என்னும் வித்திலே, சிவம் எனும் மெல்முளை தோன்றி - சிவம் என்னும் மெல்லிய முளை அங்குரித்து, வளர்ந்து கருணை மலர்ந்து - வளர்ச்சியுற்றுக் கிருபை விரிந்து, விளங் குறும் முத்தி மெய் பயன் தரும் - ஒளிர்கின்ற முத்தி என்னும் உண்மை யாகிய விளைவைக் கொடுக்கும்.

(வி - ரை) கங்காநதி தலைக்கூடப் பெறுதலுடைய கடலின்கண்ணே மேகம் முகந்தோங்கி உலகு உவப்பச் சொரிந்த பெருநீர் ஏரியிற் செறிந்து மதகின் வெளிக்கொண்டு, மடைவழிச் சென்று நிலம் புகா நிற்க, அதில் பதிந்துள்ள வித்தில் அங்குரம் தோன்றி வளர்ந்து மலர்ந்து பயன்தருமாறு போல, மாணிக்கவாசகர் என்னும் மேகம் சிவபெருமானது அருளாகிய கடலில் முகந்து திருவாசகமாகிய மழையைப் பொழிய, அது முத்தியாகிய விளைவைப் பயந்தது என முற்றுருவகம் அமைந்தது பாராட்டற்குரியதே. உயரிய சேர்ந்த என்னும் எச்சங்கள் கருணைக் கடல் என்னும் ஓர் பெயர் கொண்டன. நலம் மூழ்கியவர்க்கு அகத்தும் புறத்தும் தூய்மை பயத்த லுடைமை. உலகு, என்றது மக்கள் உயிர்களை. இப்பயன்கோடற்குரியன அவையேயாகலின்.

(க - ரை) மாணிக்கவாசகர் பொழிந்த திருவாசகம் என்னும் மழையால் உலகில் முத்தி என்னும் பயன் விளையும்.

வெண்பா

பயனாகும் நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகும் நோய்க்கு மருந்தா—முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு. 17

(ப - ரை) சிரபுரத்து நாவலன் சம்பந்தன் இயம்பு திருப்பாட்டு - சீகாழியில் அவதரித்த முத்தமிழ் விரகர் அருளிய திருப்பாடல்கள், நல் ஆண் பனைக்குப் பயன் ஆகும் - நல்ல ஆண் பனைகளுக்குப் பழம் ஆகும். விடத்திற்கு மயில் ஆகும் - நஞ்சத்திற்கு மயில் ஆகும். நோய்க்கு மருந் தாம் - நோய் தீர்த்தற்கு மருந்து ஆகும், சிந்தும் எலும்பிற்கு உயிர் ஆகும் - உருச் சிதைந்து உதிர்ந்த எலும்புக்கு உயிராகும்.

(வி - ரை) பயனாகும் நல்லாண்பனைக்கு, திருவோத்தூரில் நிகழ்ந்த அற்புதம். விடத்திற்கு மயிலாகும், திருமருகலில் நிகழ்ந்த அற்புதம். நோய்க்கு மருந்து, திருப்பாச்சிலாச்சிராமத்தில் நிகழ்ந்த அற்புதம். எலும்புக்கு உயிர் ஆனது, மயிலாப்பூரில் நிகழ்ந்த அற்புதம்.

(க - ரை) ஆளுடையபிள்ளையாரது பாடல்கள் ஐந்தொழில்களில் படைத்தல் காத்தலாகிய இரு தொழில்களைச் செய்தனவாகும்.

கலித்துறை

பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே. 18

(ப - ரை) மறைபுகழும் பிறை சூடியை - வேதங்கள் துதிக்கும் சந்திரனை அணிந்த சிவபெருமானை, பாட்டால் பாடி - தேவாரங்களால் துதித்து, மகிழ் ஊட்டா - திருவுளம் உவப்பித்து, மகிழ்சொல் இறைவனைப் பாடி - தாமும் உவந்த திருநாவுக் கரசரைப் புகழ்ந்து பாடி, உவப்பு உறுக்கவேட்டான் - அவரை மகிழ்விக்க விரும்பின ஒருவன், அவன் போல மிதப்பன் என - அந் திருநாவுக்கரசரைப் போலவே யானும்

மிதப்பேன் என்று, மலி பெருங்கல் பூட்டா விழ - மிக்க பெரிய கல்லை தனது உடலிற் பிணித்துக்கொண்டு விழ்தற்கு, மறிதிரை வார்கடற்கே போதுவன் - சுருண்டு வீசும் அலைகளையுடைய நெடிய கடலுக்கே துணிந்து செல்வன்.

(க - ரை) சிவபெருமானையன்றித் திருநாவுக்கரசு சுவாமிகளையே கடவுளாகக் கொண்டு ஒருவர் போற்றி வருவரேல் அவரும் பல அற்புதங் களைச்செய்ய வல்லவராவர்.

விருத்தம்

போத முண்ட பிள்ளை யென்பு
பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர்
கன்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க
மகனை நீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ
னக்கி யம்ப வேண்டுமே. 19

(ப - ரை) நம்பி - நம்பி யாரூ ரரே, போதம் உண்ட பிள்ளை - ஞானப் பாலை அருந்திய ஞானசம்பந்தர், என்பு பொருகண் மாது செய்ததோ - எலும்பைக் காதோடு போர்புரியும் கண்ணையுடைய பெண்ணாகச் செய் ததோ? காதல் கொண்டு - அன்புகொண்டு, சொல்லின் மன்னர் - நாவுக் கரசர், கல்மிதப்ப உய்த்ததோ - கல்லானது தெப்பமாக மிதக்கும்படி கடலிற் செலுத்தியதோ? முதலைவாய் திறந்து கக்க மகனை நீ அழைத்ததோ- முதலை தன் வாயைத் திறந்து உமிழப் புதல்வனைத் தேவரீர் மீட்டதோ? யாது அரிது - இம் மூன்றிலும் எது அரிய அற்புதம். நன்று எனக்கு இயம்ப வேண்டும் - தெளிவாக அடியேனுக்குத் தெரிவிக்க வேண்டும்.

(வி - ரை) சம்பந்தர் பூம்பாவையை உயிர்ப்பித்ததற்கு எலும்பு பற்றுக் கோடாக இருந்தது. திருநாவுக்கரசு சுவாமிகள் கடலில் மிதத் தற்குக் கருவி ஆகாது எனினும், கல்லே புணையாக உதவிற்று, பையனைக் கவர்ந்த முதலையும் இறந்தது, முதலை இருந்த நீரும் வற்றியது, நீர் இருந்த குளமும் வறண்டு வெடித்தது. இந்த நிலைமையில் பிள்ளையைத் திருப்பி மீட்டது அற்புதத்தினும் அற்புதம் என்பதனை மகாஸ்காந்தத்தில்,

வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவண்
உறைந்திடு முதலைவந் துதிப்ப வன்னதால்
இறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்.

எனப் பாராட்டப் படுதலால் அறிக.

ஏழாண்டுக்கு முன் இறந்த ஒரு பிள்ளை யாதொரு பற்றுக்கோடு மின்றி அழைக்கப்பட்டதும், முதலைவாயில் மீண்ட அப்பிள்ளை ஏழாண்டுக் குரிய உடல் வளர்ச்சியோடு மீண்டதும் ஒப்பற்ற அற்புதம்என்பது.

(க - ரை) சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவாயினின்று பிள்ளையை அழைத்தது ஒப்பற்ற அற்புதமாகும்.

அகவல்

வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டும்
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே.

(ப - ரை) இளஏறு உகந்து ஏறியை - இளமைவாய்ந்த இடபத்தை விரும்பி ஏறிய இறைவரை. பரிமாமிசைவர பண்ணியவித்தக - குதிரை மீது எழுந்தருளி வரச்செய்த சாமர்த்தியமுடைய மாணிக்கவாசக சுவாமிகளே!, பெருந்துறை இடத்து - திருப்பெருந்துறை என்னும் தலத்திலே, பெருஞ்சிர் - மிக்க மேன்மை உடைய, குருந்து உறுநிழலில் - குருந்த மரத்தின் விரிந்த நிழலில், திருந்திய - திருத்தமுற்ற, வேத சிரப் பொருள் முழுதும் - வேதமுடிவிற் பொருந்திய சைவ சித்நாந்தப் பொருள் முற்றும், கொள்ளை கொள்வோயே - சிவபெருமானிடம் மிகுதியாகப் பெற்றவரே. சிவனேநின் அடியார் மெய்யன்பு எனக்கு வேண்டும்-சிவனே!

உம்முடைய திருத்தொண்டர்களின் உண்மை அன்பு எனக்கும்வேண்டும், அருள்செய் - அருள் செய்வீராக, அலந்தேன் - வருந்ினேன். அந்தோ - ஐயோ! முறையோ முறையோ - முறையோ, முறையோ! இறையோனே என்று அழுது - கடவுளே என்று புலம்பி, செம்பொன் அம்பலக்கூத்தன் - செய்ய கனகசபையில் நடித்தருளும் சிவபெருமான், அருளால்பெற்ற அன்பினில் - திருவருளால்பெற்ற அன்பினிலே, அடியனேற்கும் ஒரு சிறிது அருளல்வேண்டும் - அடியேனுக்கும் ஒரு சிறிது தந்தருள வேண்டும். நீயே கோடல் - முற்றும் தேவரீரே கொள்ளுதல், நின் அருட்பெருக்கிற்கு ஏற்றது அன்று - உமது கிருபை மிகுதிக்கு முறைமை அன்று.

(வி - ரை) மாட்டில் ஏறுபவன் (ஏழை) திடீரென்று குதிரையில் ஏறுபவனாகச் (செல்வன்) செய்தமை 'சாமர்த்தியம்' என்பார் ஏறுகந்தேறியைப் பரிமாமிசை வரப்பண்ணிய வித்தக என்றார்.

பறவையாகிய காகம் முதலியவைகளும் தான் பெற்றவற்றைப் பகிர்ந்து கொடுப்பது இயல்பாய் இருக்க நீர்பெற்ற அன்பின் வெள்ளத்தில் ஒரு சிறிய துளியேனும் அடியேனுக்கு வாய்க்கச் செய்யலாகாதோ என்று அன்பைப்பெற வேண்டுகின்றார்.

(க - ரை) மாணிக்கவாசக சுவாமிகளே! சிவபெருமானிடத்தில் அடியேனுக்கு அன்பு உண்டாகவில்லை. நீர்பெற்ற அன்பில் ஒரு சிறிதளவேனும் அடியேனுக்கு உதவவேண்டும். உதவாவிடில் அது உமது பெருமைக்குத் தகாது.

வெண்பா

கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா— வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த தென்றழுவ ரேகழுவின்
காடேறப் புக்கவரு கர். 21

(ப - ரை) கொள்ளை கொள்ள வீடு உதவி - யாவரும் மிகுதியாகக் கொள்ளும்படி முத்தியைக் கொடுத்து, கூற்றை பிடர் பிடித்துத்தள்ளும் திருஞானசம்பந்தா! - இயமனைப் பிடரியைப்பிடித்து அகற்றவல்ல திருஞான சம்பந்தப் பெருமானே, கழுவின்காடு ஏறப்புக்க அருகார்-கழுக்கூட்டத்தில் ஏறத்துணிந்த அமணர்கள், வெள்ளம் இடும் ஏடு ஏற - வைகை நதிப் பெருக்கில் இட்ட, "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பாசுரத் திருப்பதிகம் வரைந்த ஏடு எதிரேறிச் செல்லக் (கண்டு), பால் குறைந்தது என்று அழுவர் - தம்பக்கம் குறைந்தது என்று அழுதனர்.

(வி - ரை) ஏடு ஏறப் பால் குறைந்தது என்பது சிலேடை. ஏடு - பால் ஆடை. காய்ச்சிய பாலில் ஆடை அதிகமாகப் பால் குறையும். அதனுல் பாலின் சத்துக்குக் குறை இல்லை. இதை அறியாமல் காய்ச்சியபால் குறைந்ததே என்று அழுவது பேதைமைப்பாலதாம். ஏடு - வைகையில் இட்ட ஏடு. ஏறுதல் - எதிர் ஏறுதல். பால் குறைதல்-தங்கள் பட்சம் தோற்றல். அதனுல் அழுதனர் அருகர்.

(க - ரை) வைகையில் விட்ட ஏட்டிஞல் தோற்ற அமணர் கழுவில் ஏறினர்.

கலித்துறை

அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு
கருகக் கடல்விட முண்டோ னடியிற் கசிந்துமன
முருகக் கடலன்பு பெற்றசொல் வேந்த வுனக்கரிதே. 22

(ப - ரை) கடல் விடம் பெருமிடறு கருக உண்டோன் அடியில் - பாற்கடலில் எழுந்த நஞ்சைப் பெரிய கண்டம் கருகப் பருகிய பரமருடைய திருவடிகளில், மனம் கசிந்து உருக - மனம் உருகிக் கசிய, கடல் அன்பு பெற்ற சொல் வேந்த - கடல்போலும் அன்பைப்பெற்ற வாகீசமூர்த்தியே! அருகக் கடல்கடந்து ஏறியதோ? - சமணக்கடலை நீந்தி; சைவமென்னும் கரையில் ஏறியதோ? சிலை அம்பி எனப்பெருகு அக்கடல் கடந்து ஏறியதோ? கல் தெப்பமாக மிதப்பக்கொண்டு பெருகிய அக்கடலை நீந்திக் கரையேறியதோ? உனக்கு அரிது சொல் - தேவரீருக்கு அரியது யாது செப்புவீராக?

(வி - ரை) கல்லைக்கட்டியும் கடலைநீந்தியது ஓர் அரியசெயலேயாம். எனினும் சமணர்களாகிய கடலைக்கடந்து கரையேறி வந்தது அரிய செயல் எனக் குறித்தவாறு. கடல் அலையால் மோதப்பட்ட ஒருவன் அடைந்த துன்பத்தினும் சமணர்களால் அடைந்த துன்பம் பலவாதலின் அருகக்கடல் என்றும் அதனைக்கடந்து ஏறியது உமக்கல்லாது பிறர்க்குச் செய்ய இயல்வது ஒன்று அன்று என்றும் கூறியவாறும்.

(க - ரை) திருநாவுக்கரசு சுவாமிகள் சமண சமயத்தினின்றும் சைவத்திற்கு மீளவும் வந்தது ஓர் அரியசெயலே.

விருத்தம்

உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன் மீதிவரா
நினைப்ப ருங்கயி லாய மடைந்தமை நின்று காண்குறவே
யெனக்கு வந்துறு மோமக வென்றழு கின்றநா ளலைபால்
தனித்த ருந்துபு மாலையுமிழ்ந்திடு தம்பி ரானலனே. 23

(ப - ரை) உனற்கு அரும்புகழ்மேவிய சுந்தரன் உம்பல்மீது இவரா- நினைத்தற்கரிய சிறப்புடைத்த சுந்தரமூர்த்திநாயனர் வெள்ளை யானை மேல் எழுந்தருளி, நினைப்பு அரும் கைலாயம் அடைந்தமை நின்று காண்குற - எண்ணுதற்கரிய திருக்கைலை அடைந்ததை எதிர்நின்று தரிசித் தற்கு, மகவு என்று அழுகின்ற நாள் - குழந்தையாய் அழுதநாளில், பால் அலை தனித்து அருந்துபுமாலை உமிழ்ந்திடு - பாற்கடலைத் தனித்துப் பருகி அதில் மிதந்துறுகிய திருமாலை உமிழ்ந்த; தம்பிரான் நலன் எனக்கு வந்து உறுமோ - உபமன்னிய முனிவர்பாலுற்ற உயர்ந்த திருவருள் எளியே னுக்கு வந்து எய்துமோ?

(வி - ரை) குழந்தை பாற்கடலைக் குடித்தது என்பது தோன்ற "மகவென்றழுகின்ற நாள் அலை பால் தனித்து அருந்துபு" என்றனர். பாலைக் குடிப்பவன் நாக்கில் தட்டுப்படும் துரும்பைத் துப்பி உமிழ்வது போலத் திருமாலைத் துப்பி உமிழ்ந்தனர் என்பது நயம்.

(சு - ரை) சேரமான்பெருமாள் நாயனரோடு சுந்தரமூர்த்திசுவாமிகள் கைலை அடைந்த காட்சி காணும்பேறு உபமன்யு முனிவர்க்கே வாய்த்தது.

அகவல்

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
னொருகலை யேனு முணரானஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னென்று விழிப்பி னெரியு
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணி வானே. 24

(ப - ரை) நலம் மலி வாதவூர் நல்இசை புலவ - வளம்நிரம்பிய வாதவூரில் அவதரித்த நல்லிசைப் புலவரே! மனம் நின்று உருக்கும் மதுரம் வாசக - (நினைக்குந்தொறும்) மனத்தில் நிலவி அதை உருக்கும் இனிய திருவாசகத்தைப் பாடியருளியவரே! கலங்குறு புலன் நெறிவிலங்குறு விர - நிலை தவறுவதற்கு ஏதுவாகும் ஐம்புல நெறிகளின் நீங்கிய ஆண்மையை உடையவரே! திங்கள் வார் சடைத் தெய்வ நாயகன் - சந்திரனை அணிந்த நெடுஞ்சடையையுடைய தேவநாயகனாகிய சிவபெருமான். ஒருகலையேனும் உணரான் - வேத முதலிய கலைகளுள் ஒன்றையும் உணரான். அதான்று கைகளோ முறிபடும் கைகள் - அதுவன்றித் திருக்கரங்களோ எனின் முறிபடும் நிறத்தவாம்; கண்களோ காணின் - திருக்கண்களோ எனில், தேர்ந்து உணரின். ஒன்று காலையில் காணும் - ஒன்று காலையில் தோன்றும், மாலையில் ஒன்று மயங்கித் தோன்றும் - மற்றொன்று மாலையில் விளங்கித்தோன்றும், பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும் - பழிப்பினையுடைய பிறிதொன்று விழித்த வழி அப்பார்வையிற் பட்டவை நீறும். ஆயினும், தன்னை நீ புகழ்ந்துரைத்த - இங்ஙனம் இருப்பினும், தம்மைத் தேவரீர் புகழ்ந்து சொல்லிய. பழுது இல் செய்யுள் - பழுதற்ற திருப்பாடல்களை, இகழ்ச்சி அறியா என்பு அணிவானே எழுதினன் அதனால்-இகழ்வு சிறிதும்பெருத என்பை அணிபவராகிய அவ்விறைவரே எழுதினராகலின், புகழ்ச்சி விருப்பன்போலும்-அவர் புகழ்ச்சிக் கண் விருப்பை உடையவர்போலும்.

(வி - ரை) பல விதத்தில் இகழ்ச்சியுடையவனுக்கு ஒரு புகழ்ச்சி என்ன செய்யும்? எனினும் அவ்விகழ்ச்சிகளைக் கருதாது புகழ்ச்சியையே கருதுவது மாந்தர் இயல்பு. இதனை இறைவன்பால்வைத்து "இகழ்ச்சியறியா என்பு அணிவோன்" என்றார். எலும்பை அணிதல் இகழ்ச்சி. அஃதன்றியும் கைகள் முறிபட்டவை. கண்களில் ஒன்று பகலில் மட்டும் தெரியும். மற்றொன்று இரவில் மட்டும் தெரியும். இன்னொன்று விழித்துப் பார்த்தால் எவற்றையும் தகிக்கும். இத்தகைய இகழ்ச்சிகளை எல்லாம் பாராது அவரைப் புகழ்ந்து நீர் பாடிய திருவாசகம் திருக்கோவையார் என்னும் நூல்களைத் தாமே தம் கரத்தால் எழுதினர். ஆதலின் அவர் புகழ்ச்சியில் விருப்பர் போலும்.

(க - ரை) மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகம் திருக்கோவையார் ஆகிய நூல்களைச் சிவபெருமான் தமது கையினால் எழுதினர் எனின் அந்நூலின் பெருமையை என் என்பது?

வெண்பா

வானும் புகழ்புகலி மன்னன் றொடர்பொன்று
தேனுந் திதழியோன் சீரேடு — தானுங்
கரியாய் மொழியுங் கரியாய் விடாம
லெரியா ரழல்வீழ்ந் தெழுந்து 25

(ப - ரை) வானும் புகழ் புகலி மன்னன் - தேவரும் துதிக்கும் சீகாழியில் அவதரித்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகள் (அருளிய) தொடர்பு ஒன்று, ஏடுதானும் - திருப்பதிகம் எழுதிய திரு ஏடுதானும், எரிஆர் அழல் வீழ்ந்து - எரிதலை உடைய தீயில்விழுந்து. கரியாய்விடாமல் எழுந்து - கரியாகி நீறுபடாமல். பசுமையுற்று இனிது விளங்கி - தேன் உந்து, இதழியோன்சீர் - தேன் ஒழுகுகின்ற கொன்றைமாலையை அணிந்த இறைவருடைய பரத்துவநிலையை. கரியாய் மொழியும் - தானே சான்றாக நின்று கூறும்.

(வி - ரை) கனலில் இட்ட ஏடுகள் இரண்டும் கரியாயின. எனச் சிலேடை நயம்பற்றிக் கூறினார். கரி - அடுப்புக்கரி. கரியான ஏடு அமணர் இட்டது. கரி - சாட்சி. சைவசமயமே உயர்ந்தது என்பதற்குச் சாட்சியாய் நின்ற ஏடு சம்பந்தப்பெருமான் இட்டது.

(க - ரை) தேவாரம் எழுதிய ஏடு நெருப்பிலும் வேகாது நின்றது.

கலித்துறை

துடைவாழை மேன்மடவாரல்குற் பாம்பு தொடமயங்கி
நடைவாய் பிணமெனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை
யுடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த வொருவனுயி
ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே 26

(ப - ரை) மடவார் துடை வாழைமேல் - பெண்களுடைய துடையாகிய வாழை மரத்தின்மீதுள்ள, அல்குல் பாம்பு தொட மயங்கி - நிதம்பமென்னும் பாம்புதீண்ட நினைவழிந்து, நடைவாய் பிணமெனப்பட்டார் - நடையையுடைய பிணமெனப்பட்ட மனிதரெல்லாம் - குலையுடை வாழைமேல் - குலையையுடைய வாழைமீது தங்கிய, நச்சு உரகம்திண்ட மாய்ந்த- விடத்தையுடைய அரவு தீண்டுதலால் இறந்த, ஒருவன் - மூத்த திருநாவுக்கரசு, உயிரடைவான் - உயிர் பெறும்படி, அருள்புரியும் - திருவருள் செய்த, திருநாவுக்கரசினை பெறுகிலர் - திருநாவுக்கரசு சுவாமிகளை அடையமாட்டார்.

(வி - ரை) எலும்பைப் பெண்ணாக்கிய சம்பந்தர்பால் திருமால் அடையாமைக்கு இரங்கியதுபோல, இங்கும் அப்பர் பெருமானை அடைகிலர் என வாழைமரத்தில் பாம்புதீண்டி இறந்தவர் பிழைத்தமை அறிந்தும்

ஒரு வாழை (துடை) மீது ஒரு பாம்பு (அல்குல்) தீண்ட மயங்கிக் கிடக்கும் மாந்தர் நிலைமைக்கு இரங்கிக் கூறியவாறு.

வாழை - மாதர்துடைக்கும், அரவு - நிதம்பத்திற்கும் உவமை.

(க - ரை) அப்பர்பெருமான் தேவாரம், இறந்தவரையும் பிழைக்கச் செய்தது.

விருத்தம்

அரசன் பரிமேல் வரநெடுநல்
　　யானை யெருத்தத் தமர்ந்துபோய்
வரதன்கைலை மலையடைந்த
　　மணியே மணிநீ ரிடுபசும்பொன்
றிரைசங் கெறியுங் குளத்துவரச்
　　செங்கற் செம்பொ னுப்பாடும்
பரிசின் றெனக்குன் செம்பவளத்
　　திருவாய் மலர்ந்து பகர்வாயே. 27

(ப - ரை) அரசன் பரிமேல் வர - சேரமான் பெருமாள் நாயனார் குதிரையின்மீது ஏறிஉடன்வர, நெடுநல்யானை எருத்தத்து அமர்ந்துபோய்- நெடிய நல்ல வெள்ளை யானையின் பிடரியின்மீது எழுந்தருளிச் சென்று. வரதன் கைலைமலை - சிவபிரான் அமரும் கைலைமலையை, அடைந்த மணியே - எய்திய மாணிக்கம் போல்பவரே! மணிநீர் இடும் பசும்பொன்- (திருமுதுகுன்றத்திலே) மணிமுத்த நதியில் இடப்பட்ட பன்னீராயிரம் பசும் பொன்னும். திரை சங்கு எறியும் குளத்து வர - அலைகள் சங்குகளை வீசும் (திருவாரூர்) கமலாலயம் என்னும்-குளத்தில்வரவும், செங்கல் செம்பொன் ஆபாடும் பரிசு - (திருப்புகலூரில் திருமுடிவைத்துத் துயிலப்பெற்ற) செங் கற்கள் பலவும் பொன்னுகவும் பாடுந்திறத்தை, உன் செம்பவளம் திரு வாய் மலர்ந்து - தேவரீருடைய சிவந்த பவளம்போலும் திருவாயைத் திறந்து, இன்று எனக்குப் பகர்வாய் - இன்று சிறியேனுக்குக் கூறு வீராக'.

(வி - ரை) சுந்தரமூர்த்தி சுவாமிகளே! தேவரீரும் பாடுகிறீர். அடியேனும் ஏதோ பாடுகிறேன். உமது பாடலால் ஆற்றில் இட்டது குளத்தில் வந்து சேர்ந்தது. செங்கல் செம்பொன் ஆயிற்று. அடியேன் பாடலில் அப்படி ஒன்றுமே நிகழவில்லை உம்மைப்போலப் பாடுதற்குரிய வழியை எனக்குக் கூறுவீராக.

(க - ரை) சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பாடல்கள் அட்டமா சித்திகளையும் செய்யவல்லன.

அகவல்

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெருரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெருது பெற்ருர் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
அன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாதலாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனுர்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலரெனுஞ்
செஞ்சொற் பொருளின் தேற்றறிந் தேனே. 28

(ப - ரை) அன்னம் ஆடும் அகன் துறை பொய்கை - அன்னங்கள் விளையாடும் அகன்ற துறைகளையுடைய தடாகங்கள் பொருந்திய. வாதவூர் அன்ப - திருவாதவூரில் அவதரித்த அன்பரே, பகிர்மதிதவழும் - பிறைச் சந்திரன் பொருந்திய, பவள வார்சடையோன் - பவளம் போன்ற நீண்ட சடைகளையுடைய இறைவரது, பேரருள் பெற்றும் - பெரிய திருவருள் பெற்றிருந்தும், பெருரின் அழுங்கி - அதனைப் பெருதவர் போன்று வருந்தி, நெஞ்சம் நெக்கு உருகி - மனம் நெகிழ்ந்து உருகி. நீயே நிற்பை - தேவரீரே வாடி நிற்கின்றீர், பேயேன் பெருது - பேய்த் தன்மையை யுடைய யான் அவ்வருளைப் பெருதிருந்தும், பெற்ருர்போல களிகூர்ந்து - பெற்றவர் போன்று மகிழ்ச்சி கூர்ந்து, உள்ளம் கவலை தீர்ந்தேன் - மனத்தில் கவலையை ஒழிந்தேன். ஆதலால் - ஆகையால், தெய்வப் புலமைத் திருவள்ளுவனுர் - தெய்வப் புலமையை உடைய திருவள்ளுவ நாயனுர், நன்று அறிவாரில் - தமக்கு உறுதியாவனவற்றை அறிகின்ற பெரியாரினும், கயவர்-அவை யறியாத கீழ்மக்கள். திருவுடையர்-நன்மை. உடையர், நெஞ்சத்து அவலமிலர் எனும் - அவர்போல அவை காரண மாகத் தன் நெஞ்சத்தின் கண் கவலையிலாகலான் என்றருளிய, செஞ் சொற் பொருளின் தேற்று அறிந்தேன் - திருக்குறளின் பொருட்டெளிவை தேர்ந்து உணர்ந்தனன்.

(வி - ரை) திருக்குறள் பொது மறையாகலால் அம்மறையைத் தமது பாடலில் அமைத்துப்பாடின் அந் நூற்கே ஒரு பெருமையாம். அதினும் அவ்விடத்திற்கு ஏற்றபடியாக அமைப்பது இன்னும் பாராட்டற் குறியதாம். இங்கே "நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்" என்பது திருக்குறள். படித்தவனினும் படியாதவனே மேல் எனின் யாராவது

ஒப்புவாரா? இதனை வஞ்ச நவிற்சியாகக் கூறினர் வள்ளுவனுர், இதனைச் சிவப்பிரகாச சுவாமிகள் உண்மையாகவே பொருத்திக் காட்டுகின்றனர். வாதவூர் அடிகளீர்! நீர் எப்பொழுதும் அழுதும் புலம்பியும் நெஞ்சம் நெக்கு உருகியும் கவலையோடு நிற்கின்றீர். யானே கவலையோ சிறிது மின்றி மகிழ்ச்சியுடையவனாய் இருக்கின்றேன். ஆகையினுல் படித்த உம்மினும், படியாத யான் அன்றோ மேல். வள்ளுவர் கூறிய உண்மை தேவரீர் திருமுன்அடியேன் நிலைமையை வைத்து எண்ணும் இப்பொழு தன்றோ புலப்படுகின்றது.

(க - ரை) மாணிக்கவாசகர் கண்ணீரும் கம்பலையுமாக அழுவது சிவனடிப் பேற்றுக்கே.

வெண்பா

தேனே றலர்சூடிச் சில்பலிக்கென் றூர்திரியும்
ஆனேறி யாண்டுப்பெற் றான்கொனீ — தானேறும்
வெள்ளைமணி யென்று வினவுவோம் வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின் 29

(ப - ரை) தேன் ஏறு அலர்சூடி - வண்டுகள் பொருந்திய மலர்களை அணிந்து, சில்பலிக்கு என்று-சிறிய பிச்சைக்கென்று, ஊர்திரியும் ஆனேறி- ஊர்கள்தோறும் அலையும் இடப வாகனத்தை உடைய சிவபெருமான், நீ ஏறும் வெள்ளைமணி - தேவரீர் ஏறிவரும் வெண் முத்துச் சிவிகையை, யாண்டுப் பெற்றான் என்று வினவுவோம் - எவ்விடத்திற்பெற்று உமக்குக் கொடுத்தார் என்று கேட்போம், வாங்கிய அப்பிள்ளையை யாம் காணப் பெறின் - பெற்றுக்கொண்ட அத்திருஞானசம்பந்தப் பிள்ளையாரை யாம் தெரிசிக்கப் பெறுவோமாயின்.

(வி - ரை) முத்துச் சிவிகையைப் பிறர்க்குத் தானம் கொடுக்கும் ஒருவர் பெருஞ் செல்வராயன்றோ இருக்கவேண்டும். அவர் 'காளை ஏறு வரேல்' குடிப்பது நீர், கொப்பளிப்பது பன்னீராக அன்றோ ஆகும். அது எமது சிவபெருமானுக்கு விருப்பு. அதனைப் 'பாரிடம் சூழ் வரத்தான் பலி கொண்டும் தன்பாத மலர் சேரடியார்க்குப் பெருவாழ்வளிப்பன், திரைக்கடலில் கார்விடந்தானுண்டும் போற்றும் புத்தேளிர் கடும்பசிக்கு ஆரமுது ஊட்டுவன் தென்கருவாபுரி ஆரியனே'' என்னும் திருக்கருவைக் கலித்துறை அந்தாதியால் அறிக. கொல்: அசை.

(க - ரை) காளை ஏறும் சிவபெருமான் சம்பந்தப் பெருமானுக்கு முத்துப்பல்லக்கு எங்கிருந்து கொடுத்தார்?

விருத்தம்

பெற்ரு னினைப் பெற்றவர்போற் பெறலும் பிறப்பதுண்டேல்
நற்ரு ரணியி னினைப்போற் பிறப்பதும் நல்லகண்டாய்
செற்ருர் புரமெரி செய்தவில் வீரன் றிருப்பெயரே
பற்ரு மறிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே 30

(ப - ரை) செற்ருர் புரம் எரிசெய்த - பகைவர் முப்புரங்களையும் நீக்கிரையாக்கிய. வில்வீரன் - மகாமேருவை வில்லாக வுடைய சிவபெருமானது, திருப்பெயரே பற்ரு - திருநாமமாகிய திரு ஐந்தெழுத்தையே துணையாகப் பற்றிக்கொண்டு. மறி வெண்திரை - மடங்கிவிசும் வெண்ணிய அலைகள் உயர்ந்த, கடல் நீந்திய பாவலனே - கடலைக் கடந்த நாவுக்கரசனே! நல்ல தாரணியில் - உயர்ந்த இவ் வுலகில், பெற்ருல் - (ஒரு புதல்வனைப்) பெறின், நினைபெற்றவர் போல் பெறஅம் - உம்மைப் பெற்ற பிதா மாதாக்களைப் போல் (உம்மை ஒத்த ஓர் புதல்வனைப்) பெறுதலும், பிறப்பது உண்டேல் - பிறத்தல் உளதாயின். நினைப்போல பிறப்பதும் நல்ல, உம்மைப்போல் (ஒரு புதல்வனுகிப்) பிறத்தலும் உயர்ந்தன.

(வி - ரை) பெறுதலும் பிறத்தலும் எழுவாய். ஆகலின் நல்ல என பன்மைப் பயனிலை கூறினர். சிவபெருமான் திருநாமம் திருவைந்தெழுத்து என்பதை "நந்தி நாமம் நமச்சிவாயவே"; திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்" என்னும் சம்பந்தப்பெருமான், அப்பர் மூர்த்திகள் திருவாக்கில் முறையே காண்க. கண்டாய் - அசைநிலை.

(க - ரை) குழந்தை பெற்ருல் திருநாவுக்கரசரைப்போலப் பெறுதலும் பிறந்தால் அவரைப்போல் பிறத்தலும் வேண்டும்.

விருத்தம்

பாவாய்ப் பொழிந்த வானமுதப்
பவளத் திருவாய் நம்பிநீ
சேவாய்ப் பொருதுந் தருமமுடைத்
தேவன் மலைக்குப் போம்பொழுது
காவாய்ப் பயந்த தடக்கைமலர்க்
கழறிற் றறிவார் கடாவிவரு
மாவாய்ப் பிறக்கக் கிடையாதே
மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே. 31

(ப - ரை) வான் அமுதம் - தேவாமிர்தத்தை, பா ஆய்ப் பொழிந்த - திருப்பாடல்களாக அருளிய, பவளம் திருவாய் நம்பி - பவளம் போலும் திருவாயையுடைய நம்பியாரூரரே! பொருதும் சே ஆய்த் தருமம் உடை - சண்டையிடும் இடபமாகிய தரும தேவதையை வாகனமாக வுடைய, தேவன் மலைக்கு நீ போம்பொழுது - சிவபெருமான் அமர்ந்த திருகைலைமலைக்குத் தேவரீர் எழுந்தருளுங்கால், கா ஆய்ப் பயந்த - கற்பகத் தருவைப்போலக் கொடுக்கின்ற, மலர் தடம் கை - செந்தாமரை மலர்போலும் பெருமை வாய்ந்த கரங்களையுடைய, கழறிற்றறிவார் கடாவி வரும் - சேரமான் பெருமாள் நாயனர் செலுத்திவரும். மா ஆய்ப் பிறக்க - குதிரையாய்ப் பிறக்கும்படி, மா ஆய்ப் பிறக்கும் திருமாற்கு - இனி கலியுக முடிவில் குதிரையாய்ப் பிறக்கும் திருமாலுக்கு, கிடையாதே - கிட்டாமற் போயிற்றே.

(வி - ரை) மேல் 8-ம் பாடலில் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமி களிடம் வந்து திருமால் எலும்பைப் பெண்ணாக்கிக்கொள்ளாமை பற்றியும் 26ம் பாடலில் வாழை மரத்தில் பாம்பு தீண்டும் மயக்கத்தைப்போக்கு தற்கு மாந்தர் திருநாவுக்கரசரிடத்தில் வந்து அருள்பெருமைபற்றியும் இரங்கியது போலவே இப்பாடலிலும் இரங்குகிறார்:- நமது சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலையில் இருந்துவந்த கணங்களோடு, வெள்ளானைமேற் செல்ல அதையறிந்த சேரமான் பெருமாள் நாயனர் :தமது பட்டத்துக் குதிரைகளின் ஒன்றைக்கொணர்வித்து ஏறி அதில் காதில் திருவைந் தெழுத்தை உச்சரிக்க அதுவான் வழியே சென்று அவரை வணங்கி அவ ரோடு கைலையின்கண் சென்றது. குதிரையாக அவதாரமெடுக்குந் திருமால் சேரமான் பெருமாள் நாயனர் ஏறிய குதிரையாக அவதாரம் எடுக்கக்கூடாதா! என்றிரங்கியபடி.

பாவாய்ப் பொழிந்தவானமுதம் தேவாமிர்தத்தையே பாடலாகப் பாடினவர் என்றது தேவாரப்பாடல் ஒவ்வொன்றும் அமிர்தம் போன்றவை என்பதாம்.

(க - ரை) குதிரையாகவரும் திருமால் சேரமான்பெருமாள் நாயனர் ஏறிவரும் குதிரையாகப் பிறக்கலாகாதா? என்று இரங்கியபடி.

அகவல்

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்

யாவருமோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே. 32

(ப - ரை) திரு ஆர் பெருந்துறை - செல்வமிக்க திருப்பெருந் துறையிலே, செழுமலர்க் குருந்தின் நீழல் வாயுண்ட - செழித்த மலர்கள் பொருந்திய குருந்த மர நிழலில் பருகிய, நிகரில் ஆனந்தத்தேன் - ஒப்பில்லாத சிவானந்தத்தேன், தேக்கு எறியும் - உவட்டெடுக்கும், செய்ய மாணிக்கவாசகன் - சிறந்த மாணிக்கவாசகர். புகன்ற மதுரம் வாசகம் - அருளிச்செய்த இனிய திருவாசகம், யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின் - எவரும் ஓதுகின்ற இயல்பை உடையதாகலான், பொன்கலம் நிகர்க்கும் - பொன் பாத்திரத்தை யொக்கும், பூசுரர் நான்மறை - அந்தணர் ஓதும் நான்கு வேதங்களும், மண்கலம் நிகர்க்கும் - மட்பாத்திரத்தை ஒக்கும். (அஃதன்றி) மதுரம் வாசகம் - ஓதின் இனிய திருவாசகத்தை ஓதினுல், உறுபயன் முத்தியே - அதனுல் எய்தும் உண்மைப் பயன் முத்தியேயாகும். வேதம் ஓதின் - அவ் வேதங்களை ஓதினுல், மெய்ப்பயன் அறமே - அவற்ருலெய்தும் பயன் விண்ணுலகாதி பதங்களே.

(வி - ரை) திருவாசகம் பொன்பாத்திரத்தை ஒப்பது. வேதம்... மண்பாத்திரத்தை ஒப்பது. மேல், 4-வது பாட்டில் வேதத்தினும் திரு வாசகத்திற்கு ஏற்றங் கூறியதுபோலவே இங்குங் கூறுகிருர்.

பொன் பாத்திரம் யார் தொடினும் யார் உபயோகிக்கினும் குற்ற முருது. உயர்ந்த விலையையும் உடையது. கீழே விழுந்தாலும் உடையாது. அதுபோல திருவாசகம் யாரும் படிக்கலாம், யாரும் உணரலாம், எப்படிப் படித்தாலும் சிதைவுருது. முத்தியாகிய பெரும் பயனையும் தருவது.

மண்பாத்திரம் ஒருவர் தொட்டதை வேருெருவர் தொடலாகாது. உபயோகிக்கவும் படாது. கீழே விழுந்தால் எளிதில் சிதைந்துவிடும்.

வேதம் குறிப்பிட்ட ஒரு குழுவினரைத் தவிர ஏனையோர் படிக்கவும் கேட்கவும் கூடா. முறைதவறிப் படிப்பின் சிதைவுறும். பயனும் அறமன்றே.

தற்காலம் சில ஆராய்ச்சியாளர், திருவாசகம் யாவரும் எளிதில் கிடைக்கப்பெற்றுப் பயன் தரும் தன்மையால் மட்கலம் போன்றதென்றும், எளிதில் எவருக்கும் கிடைக்கப் பெருமையாலும், சிலர்க்கே உரிமை யானதன்மையாலும் வேதம் பொற்கலம் நிகர்க்கும் என்றுங் கூறுவர்.

அவர் கூறும் பொதுத்தன்மை ஒருவாறு ஒக்குமேனும் நூலாசிரியர் கருத்துக்கு அது மாறுபட்டது. "பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை மட்கலம் நிகர்க்கும் மதுரவாசகம்" என்று அவர்கள் பொருள்கோள் கொள்வர்.

(க - ரை) திருவாசகம், அனைவரும் ஓதப் பயன்தரும் தன்மையுடையது. ஆதலின், பூசுரர்க்கே ஓதலாகும் வேதத்திலும் அது சிறந்தது.

வெண்பா

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை — மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து. 33

(ப - ரை) சம்பந்தன் சிவிகைப் பரித்தார் - சம்பந்தப்பெருமான் சிவிகையைத் தாங்கப்பெற்றவர், உந்தும் சிவிகையினை ஊர்ந்து திரிகுவர் - தான்ஏறிச்செலுத்தும் சிவிகையை நடாத்தித்திரிவாராகலான், அறத்து ஆறு இது வென வேண்டா - அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவையான் உணர்த்துதல் வேண்டுவதில்லை, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடையை மறுத்தார் - சிவிகையைச் சுமப்பவனோடுசெலுத்து வானிடையே காணப்படும் காட்சி அளவையினாலே அறியப்படும், என்னும்பொருளமைந்த திருக்குறளை மறுத்தவருமானார்.

(வி - ரை) 28-ஆம் பாட்டில் நன்றறிவாரென்னும் திருக்குறளை ஆண்டது போலவே இப்பாட்டிலும்,

"அறத்தாறிது வெனவேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தானிடை"

என்னும் திருக்குறளை ஆளுகின்றார். ஆள்வதுமட்டுமின்றி ஆராய்ச்சியும் செய்கின்றார்.

பல்லக்கில் ஏறிச் சவாரிசெய்பவனும் ஒரு மனிதன். மிருகங்களைப் போல அவனைச் சுமந்துசெல்பவரும் மனிதர். இவ்விருவரும் மனிதராயிருந்தும் வேறுபாடு நேர்ந்தமைக்குக் காரணம் நம்மால் அறியலாகாது. வள்ளுவர் அதனையறிந்து இவ்வுதாரணத்தின்மூலம் விளக்குகின்றார்.

முற்பிறப்பில் அறம்பல புரிந்து எளியவர்க்கிரங்கி உதவியதன்பயனாக இப்பிறப்பில் செல்வனாகப் பிறந்து பல்லக்கில் ஏறிச் செலுத்துகின்றான். மற்றவர் அறம் புரியாமையின் வறியராய் அவனைச் சுமந்து வயிறு வளர்க்கின்றனர் என்பதாம்

இதனை நூலாசிரியர் ஆராய்வது, பல்லக்குச் சுமப்போர் ஏனைய இடங்களில் பாவியர். எங்கள் சம்பந்தப்பெருமான் பல்லக்கைச் சுமப்பவரோ பெரும் புண்ணியம் செய்தவர். ஆகையால் பல்லக்குச் சுமப்போர் எவரும் முற்பிறப்பில் பாவியர் என்பது ஆராய்ச்சிசெய்து மறுக்கப் பட்டது. இதனைத் திருப்பூந்துருத்தியில் அப்பர்சுவாமிகள் "உம்மடியேன் உம்மடிகள்தாங்கிவரும் பெருவாழ்வு வந்து எய்தப்பெற்று இங்குற்றேனென்றார்" என்ற பெரியபுராண வரலாறு காண்க.

(க - ரை) சம்பந்த சுவாமிகளின் சிவிகை சுமக்கும் அடியவர் பெரும் புண்ணியம் செய்தவர்கள்.

கலித்துறை

ஊர்ந்து வருமிள வேறுடையான்ற னுளத்தருளாற்
சார்ந்து சமண்வீட் டுறுமுனக் கேவருஞ் சைவநலங்
கூர்ந்து மிளிர்தரு நாவர சேநல் குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமுமே. 34

(ப - ரை) நாவரசே - திருநாவுக்கரசரே, இள ஏறு ஊர்ந்துவரும் உடையான் தன் - இளமை வாய்ந்த இடபவாகனத்தைச் செலுத்திவரும் சிவபெருமானுடைய, உளத்து அருளால் சமண் சார்ந்து - திருவுள்ளக் குறிப்பினால் சமண் சமயத்தை அடைந்து, (அருளால்) விட்டு உறும் உனக்கே - அத்திருவருளாலே அதனை நீங்கிச் சைவ சமயத்தைச் சார்ந்த தேவரீருக்கே. வரும் சைவ நலம்கூர்ந்து மிளிர்தரும் - பின்சேர்ந்த அச் சைவத்தின் சிறப்புச் சிறந்து விளங்கும். (எங்ஙனமெனின்) நல்குரவுமுனம் சேர்ந்து மருவினர்க்கே - தரித்திரத்தை முன் சார்ந்து பின் செல்வமெய்தப் பெற்றவர்க்கே, செல்வமும் சிறந்து ஓங்குறும் - அச்செல்வமும் அருமை உடைத்தாய் விளங்கும்.

(வி - ரை) வெய்யிலில் அலைந்து திரிந்தவனுக்குத் தழைத்த மரநிழல் கிடைத்ததுபோலவும், வறுமையால் வருந்தி உழன்றவனுக்குப் பெருஞ் செல்வம் கிடைத்ததுபோலவும், சமண சமயத்தில் வருந்திய அப்பர் சுவாமிகளுக்குச் சைவ சமயம் எய்தும் பேறு வாய்த்தது எனக் கூறப் படுகின்றது.

(க - ரை) சைவ சமயத்தில் இருந்து சைவநலம் பெறுபவர்களினும் சமணசமயம் புகுந்து சைவமெய்திய அப்பமூர்த்திகளின் சைவ நலமே சாலச் சிறந்ததாகும்.

விருத்தம்

செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனு
மல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப னம்பியா ரூரன்ருனே. 35

(ப - ரை) செல்வம்நல் ஒற்றியூரன் - செல்வங்கள் நிறைந்த திருவொற்றியூரில் எழுந்தருளும் சிவபெருமான், செய்ய சங்கிலியால் ஆர்த்து - செவ்விய சங்கிலி நாச்சியாரால் கட்டி, மல்லல்அம் பரவை தன்கண் - வளப்பம் பொருந்திய அழகை உடைய பரவை நாச்சியாரிடத்தே, மாழ்குஉற அமிழ்த்து மேனும் - மயங்கும்படி அமிழ்த்துவாரேனும், நம்பி யாரூரன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள், மகிழ் அவன் அடியில் - மகிழ்ச்சியைத் தரும் அக்கடவுளின் திருவடிகளில், அல்லும் நன்பகலும் நீங்காது எய்தி - இரவும் பகலும் இடைவிடாது அடைந்து, நல்ல இன்பு அடைந்து இருப்பன் - சிறந்த இன்பத்தை நுகர்ந்து விளங்குவார்.

(வி - ரை) சங்கிலி பரவை என்னும் இரு சொற்களைக்கொண்டு சிலேடைப்பொருள் அமைத்து ஒரு கற்பனை கூறுகின்ருர்.

சங்கிலி:- சங்கிலிநாச்சியாரையும் இருப்புச் சங்கிலியையும் குறிக்கும்.

பரவை;- பரவைநாச்சியாரையும் சமுத்திரத்தையும் குறிக்கும்.

சிவபெருமான் வன்றெண்டப் பெருந்தகையைச் சங்கிலியால் கட்டிப் பரவையுள் (சமுத்திரத்துள்) அமிழ்த்தினுர். பிறராயில் சமுத்திரத்திலிருந்து மேல்வர அறியாது அழுந்தி இறந்திருப்பர். நமது பெருந்தகையார் "பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" என்றபடி, சிவபெருமானுடைய திருவடியைத் தவிர வேறென்றும் அறியாதவராய் அதனையே புணையாகக்கொண்டு இருந்தமையின், அமிழாமை மட்டுமன்றி இன்பமும் அடைந்திருந்தார். அவ்வின்பமும் சாமான்யமானதன்று. நல்ல இன்பம் என்பார்; "நல்லவின்படைந்திருப்பன் நம்பியாரூரன்ருனே" என்ருர்.

(க - ரை) சுந்தரமூர்த்திநாயனுர் எப்பொழுதும் சிவபெருமானைத் தவிர வேறென்றறியாதவர்.

அகவல்

தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாதவூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே. 36

(ப - ரை) சிவன் அவனடியன் வாதவூரனை - சிவபெருமான் தனது அடியவராகிய திருவாதவூரடிகளை, கடிவுஇல் மனத்தால் கட்ட வல்லார்க்கு - நீக்கமின்றிய உள்ளத்தால் அன்புடன் பிணிக்க வல்லவர்க்கு, தானே முத்தி தருகுவன்-தாமே முற்பட்டுவந்து முத்தியைத் தந்தருளுவார்.

(வி - ரை) முத்தி அடைதல் எளிய காரியமன்று. அதனை, ''புறச் சமயநெறி நின்றும் அகச்சமயம் புக்கும் ... சைவத்திறத்தடைவர், அதிற் சரியா கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச்சேர்வர்'' என்றதனால் அறியலாம்.

நூலாசிரியர் இதனை மறுத்து, முத்தியடைதலைப்போல எளிய காரியம் வேறொன்றும் இல்லை; முத்தி விரும்புவோர் 'வாதவூரடிகளைத் தமது உள்ளத்தில் நிலையாகக் கொள்வரேல்' என்று காரணத்துடன் கூறுகிறார்.

(க - ரை) வாதவூரடிகளை வழிபடுவோருக்கு முத்தி எளிது.

வெண்பா

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க—ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று. 37

(ப - ரை) வண்மை நலம் கல்வி - கொடையும், புண்ணியமும் கல்வியும். நல் ஆதரவு ஞானங்கள் எல்லாம் - நல்ல அன்பும் ஞானமும் ஆகிய யாவும், திருஞானசம்பந்தன் சேவடியே என்னும் - திருஞான சம்பந்தப் பெருமானுடைய செவ்விய திருவடிகளே எனக்கொள்ளும், ஒரு ஞானசம்பந்தம் உற்று - ஒப்பற்ற ஞானசம்பந்தத்தை யடைந்து, வல்லார் பிறப்பு அறுப்பர் - வல்லவர் பிறப்பை அறுப்பர்.

(வி - ரை) தமக்குப் பலவகையால் வரும் இன்ப நலங்களெல்லாம் திருஞானசம்பந்தப்பெருமான் திருவடியே என்னும் புத்தியடைந்தவர்

எளிதில் பிறப்பை அறுப்பர். முற்பாட்டில் வாதவூரடிகளைக் கூறியது போல இதில் சம்பந்தப்பெருமான் பெருமை கூறுகிருர்.

(க - ரை) திருஞானசம்பந்த சுவாமிகளை வழிபடுவோருக்குப் பிறப்பில்லை.

கலித்துறை

உற்று னலன்றவந் தீயினின் ருனல னூண்புனலா
வற்று னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்று னெழுதியுங் கூறியு மேஎன்றுந் துன்பில்பதம்
பெற்று னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே. 38

(ப - ரை) ஒரு நம்பி அப்பூதி யென்னும் பெருந்தகை - ஒரு நம்பி அப்பூதி என்று நம்பியாரூரரால் துதிக்கப்பெற்ற மிக்க மேன்மையை யுடையவர், தவம்உற்றுனல்லன் - புலன்களை அடக்கிச்செய்யும் ஒரு தவத்தையும் செய்தவர் அல்லர், தீயில் நின்ருன் அல்லன் - பஞ்சாக்கினி மத்தியில் நின்று கடுந்தவம் புரிந்தவரும் அல்லர். ஊண் புனலா நுகர்வும் அற்ருன் அலன் - நீரையுணவாகக் கொண்டு மற்றை யுணவுகளை நீக்கினவரும் அல்லர். திருநாவுக்கரசு என்னும் ஓர் சொல்தான் எழுதியும் - திருநாவுக்கரசரென்னும் ஒரு சொல்லை யெங்கும் எழுதியும், கூறியுமே - அதனை உச்சரித்துமே, என்றும் துன்பு இல் பதம்பெற்ருன் - எக்காலத்திலும் துன்பமில்லாததாகிய முத்தியை அடைந்தார்.

(வி - ரை) ஒரு பெரிய பொருளை அடைய விரும்புவோர் தீயில் நின்றும், வாயுபக்ஷணம் பண்ணியும், நுகர்பொருளை வெறுத்தும், தவம் செய்து பெறுவர். அப்பூதியடிகள் இவ்வாறு ஒருதவமும் செய்திலர். திருநாவுக்கரசு சுவாமிகளின் பெயரைச் சொல்லியும் எழுதியுமே பெரும் பேறு பெற்ருரெனின், அப்பர் பெயர் எவ்வளவு மாண்புடையது என்று பாராட்டியவாறு.

(க - ரை) திருநாவுக்கரசு சுவாமிகளின் பெயரைத் துதித்து வருத லாலேயே முத்தி கிடைக்கும்.

விருத்தம்

பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி
பெரிதுவந்துன் திருவடித்தா மரையைப்போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்ருனென்ருல்
விளங்கிழையா ரிருவரொடு முயங்கலாமோ

வுரைமதிநின் றனைவெறுப்ப தென்கொ னின்னை
யுடையானுக் கடுத்தசெய லுனக்குமாயின்
சுரர் முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோ யறமுதல்நால் வகைசெய்தோயே. 39

(ப - ரை) சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர் தொண்டத்தொகை செய்தோய் - தேவரும் முனிவரும் வணங்குகின்ற மிக்க கீர்த்திபடைத்த திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்தவரே! அறம் முதல் நால் வகை செய்தோய் - அறம், பொருள், இன்பம் விடென்னும் உறுதிப் பொருள் நான்கையும் நடத்திய நளியவரே. பெருமிழலைக் குறும்பர் எனும் பரமயோகி - பெரு மிழலைக்குறும்பநாயனர் எனும் மேன்மையான யோகி யானவர். பெரிது உவந்து - மிகவும் மகிழ்ந்து, உன் திருவடித் தாமரையைப் போற்றி - தேவரீருடைய திருவடிக் கமலங்களைத் துதித்து, விரைமலர் தூய் வந்தனை செய்கின்ருன் என்ருல் - மணமிக்க மலர்களால் அருச்சித்து வழிபடுகின்ருரென்ருல், விளங்கிழையார் இருவரொடு முயங்கல் ஆமோ? விளங்கும் ஆபரணங்களை யணிந்த தேவிமார் இருவரோடு சேர்ந்து வாழ் வது தகுதியோ? (தகுதியன்ருயினும்)

நின்னை உடையானுக்கு - தேவரீரை அடிமையாக உடைய ஆண்டானுக்கு, அடுத்த செயல் உனக்கும் ஆயின் - உரிய செய்கை உமக்கும் பொருந்துமானல் (அதை அறிந்து உம்மை வணங்காமல்) நின்றனை வெறுப்பது என் - தேவரீரை வெறுப்பது என்னை.

(வி - ரை) ஒரு துறவியால் வணங்கப்படும் தகுதி அவனிலும் சிறந்த ஒரு துறவியின் இடத்தில் இருக்குமேயன்றி இல்லறத்தானிடத்தில் இருக்காது. பெருமிழலைக்குறும்ப நாயனர் என்பவர், யோகத்தில் சிறந்த ஒரு துறவி. சுந்தரமூர்த்தி நாயனர் கைலைக்குச் செல்வதை முதல்நாளே அறிந்து தமது உயிரை நீத்தவர்.

வன்ருெண்டப் பெருந்தகையாரே! பெருமிழலைக் குறும்பர் என்னும் பரமயோகி உம்மைத் தெய்வமாக வழிபட, நீர் ஒரு இல்லறத்தானைப்போல இருமனைவியரோடுகூடியிருக்கலாமா? என்றுவினவ, அதற்குச்சமாதானம்:_ நீர் என்ன செய்வீர், உம்மையாட்கொண்ட பெருமானுக்கே இரு மனைவிய ரோடு வாழும் வாழ்க்கையுள்ளது. அவரது அடியாராகிய நீரும் அத் தகைமையுடையராயுளீர்! என்று கூறுகின்ருர்.

அறம் முதல்நால்வகைசெய்தோய்:- ஏனையவர்செய்யாதஅறம்பொருள் இன்பம் விடென்னும் நான்கையும் நடத்தினவர் வன்ருெண்டப் பெருந் தகையார் என்பது கூறப்படுகிறது. நாடோறும் மாகேசுவர பூசைநடத்தி வந்ததால் அறமும், தலங்கள்தோறும் சென்று பெருமானைப்பாடிப் பொருள்

ஈட்டினமையால் பொருளும், பரவைநாச்சியாரையும் சங்கிலிநாச்சியாரையும் மணந்தமையால் இன்பமும், மீளவும்கைலைக்குச்சென்று அணுக்கத் தொண்டராயிருந்தமையால் சிவன் முத்தராய் முத்தியும் அடைந்தவராவர்.

(க - ரை) பல பல வேடமாகும் பரமனுக்கு அடுத்த செயலும் பல பலவாகும். அவற்றுள், வந்தனை செய்த பெருமிழலைக் குறும்பர்க்கும் அவ்வந்தனையை யேற்ற நம்பியாரூரருக்கும் உடையானுக்கடுத்த செயலே ஆகும். ஆயினும், செயல் வேறுபாடுபற்றி அடியார் திறத்தில் பேதங் கற்பித்தல் கூடாது.

அகவல்

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. 40

(ப - ரை) செய்யவார்சடை தெய்வ சிகாமணி பாதம் போற்றும் - சிவந்த நீண்ட சடைமுடியையுடைய தேவநாயகராகிய சிவபெருமானது திருவடிகளை வழிபடும், வாதவூர் அன்ப - திருவாதவூரில் அவதரித்த அன்பரே! பூ எனப்படுவது - பூ என்று எவராலும் உயர்த்திப் புகலப் படுவது, பொறி வாழ் பூவே - திருமகள் வாழும் செந்தாமரை மலரேயாம். (அதுபோலப்) பா எனப்படுவது - பா என்று சிறப்பித்துச் சொல்லப் படுவஃது. உன் பாட்டு - தேவரீர் அருளிய திருப்பாடல்களே.

(வி - ரை) பொதுச்சொல்லால் குறிக்கப்படும் பொருள் ஒரு சிறப்புப்பொருளைக் குறிக்குமாயின், அப்பொருளே அவ்வினத்தில் எவற்றினும் சிறந்ததாகும்.

பூ என்ற மாத்திரத்தில் தாமரைப் பூவே கொள்ளப்படும். அதுபோலப் பா என்றால் மாணிக்கவாசகர் பாடலே கொள்ளற்பாலது. இதற்கு இலக்கணம், ''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் பெறப்படும்.

(க - ரை) திருவாசகமே உலகத்திலுள்ள எல்லாப் பாடல்களினும் மேலான பாடலாகக் கொள்ளற்பாலது.

நூலும் உரையும் முற்றும்.



தண்முகம் காட்டிச் சைவம் புரந்த
சண்முக தேசிக பரமா சாரியர்
மண்முகத் தவர்க்கு வரங்கொடுத் தருளும்
விண்முக நோக்கிய விழுமிய கோயில்.